விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 02 வியாழக்கிழமை (15.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

# சித்திரைப் புத்தாண்டு தினத்தில் யாழில் சோகம்



## 8 வயது சிறுவன் பட்டா மோதியதில் பலி

(யாழ்ப்பாணம்)
சகோதரர்கள் இருவர் துவிச்சக்கரவண்டியில் பயணித்த போது எதிரே வந்த பட்டா ரக வாகனம் மோதியதில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழுந்துள்ளார்.

19

## சிறுவன் இயக்கிய மோ.சைக்கிளில் சிக்கி 1½ வயது சிறுமி உயிரிழப்பு

(சாவகச்சேரி)
எட்டு வயதுச் சிறுவன் இயக்கிய மோட்டார் சைக்கிள் அவரது ஒன்றரை வயது தங்கையின் உயிரைப் பறித்த சம்பவம் ஒன்று நேற்றுக் காலை சாவகச்சேரி - மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றது.
புதுவருட தினத்தன்று காலை வேளையில் பெரியவர்கள் எவரும் அருகில் இல்லாத சமயம் வீட்டில் நிறுத்தி வைக்கப்

19

# ஹிட்லர் தொடர்பான கருத்து

# அரசின் நிலைப்பாடு அல்ல

## கோட்டா அவ்வாறு ஆட்சி செய்யமாட்டார்
## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விளக்கம்



(கொழும்பு)
ஜேர்மனி சர்வாதிகாரி ஹிட்லரைப் பற்றி இராஜாங்க அமைச்சர் ஒருவர் அண்மையில் வெளியிட்ட கருத்து அரசின் நிலைப்பாடு அல்ல. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவ்வாறு செய்ய மாட்டார் என அரசாங்க பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஹிட்லர் ஆகியோரைப் பற்றி தெரிவிக்கப்பட்டது ஆளும் கட்சி

19

## வவுனியாவில் வன்முறை
### 15 பேர் காயம்

(வவுனியா)
வவுனியாவில் சித்திரை புதுவருட தினமான நேற்று இடம்பெற்ற மோதல் மற்றும் விபத்துச் சம்பவங்களில் 15க்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலை

19

## போலி கடவுச்சீட்டு தமிழ் இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)
போலிகடவுச்சீட்டை பயன்படுத்தி கனடா செல்ல முற்பட்ட இளைஞன் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில்வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

19

## புத்தாண்டில் அதிகாலையில் 165 பேர் இரத்தக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)
தமிழ் - சிங்களப் புத்தாண்டு நாளில் அதிகாலையில் மொத்தம் 165 பேர் இரத்தக் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இது கடந்த ஆண்டை விட 47 வீதம் உயர்ந்துள்ளது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின்

19

## யாழில் மேலும் 25 பேர் உட்பட வடக்கில் 27 பேருக்கு கொரோனா
### 21 பேர் திருநெல்வேலி சந்தையுடன் தொடர்புடையோர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் 25 பேர் உட்பட வடக்கில் 27 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்

19

## இலங்கையில் ஒரு இலட்சத்தை அண்மிக்கும் கொரோனா தொற்றாளர்கள்
### புத்தாண்டு கொண்டாட்டங்களால் மேலும் அதிகரிக்கலாம்

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை அண்மித்துள்ளது.
புத்தாண்டு கொண்டாட்டங்களால் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்க வாய்ப்புள்

19

## 38 அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)
ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பின்னரான காலத்தில் இலங்கையில் செயற்பட்டுவரும் 38 அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் அரசாங்கத்

19

## முல்லையில் விபத்து
### ஒருவர் பலி

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்

19

## ஆளுமையுள்ள தலைவரே வடக்குக்குத் தேவை
### என்.சிறிகாந்தா

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் பொது ... மைச்சர் வேட்பாளராக வேலன் சுவாமிகளை நிறுத்த

19

## கடும் போக்குடைய 11 இஸ்லாமிய அமைப்புகளுக்கு இலங்கையில் தடை
### அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியீடு

3ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட போக்குவரத்துச் சேவை 19 ஆம் திகதி வரை தொடரும்

## இராஜாங்க அமைச்சர் அமுனுகம அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்கு புறப்பட்டு செல்லும் பொது மக்களுக்காக கடந்த 9 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட விசேட பஸ் மற்றும் புகையிர சேவையை மீண்டும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

புத்தாண்டுக்கு தங்களது சொந்த இடங்களுக்கு சென்றவர்கள் மீண்டும் நகரங்களுக்கு வருவதற்காக மேற்கொண்டுள்ள போக்குவரத்துசேவை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்கு புறப்பட்டு செல்லும் பொது மக்களுக்காக கடந்த 9 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட விசேட பஸ் மற்றும் புகையிரத சேவை 13 ஆம் திகதிவரை இடம்பெற்றது.

இதன்போது கொழும்பு மற்றும் பிரதான நகரங்களில் இருந்து நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் போதுமானளவு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் 24 மணி நேரம் சேவையை மேற்கொண்டிருந்தன.

இதனால் புத்தாண்டு சமயத்தில் இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு சிரமமின்றி செல்வதற்கு வசதியாக இருந்தது. அத்துடன் புத்தாண்டு தினத்திலும் மக்களின் போக்குவரத்து தேவைக்காக போதுமானளவு பஸ் சேவைகள் இடம்பெற்றன.

அதேபோன்று புத்தாண்டுக்காக சொந்த இடங்களுக்கு சென்றவர்கள் மீண்டும் தங்கள் அலுவலக இடங்களுக்கு திரும்புவதற்காக விசேட பஸ் மற்றும் புகையிரத போக்குவரத்து சேவையை ஆரம்பித்திருக்கின்றோம்.

இன்று 15 ஆம் திகதி முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இந்த விசேட போக்குவரத்து சேவை இடம்பெறும்.

அத்துடன் இம்முறை புத்தாண்டில் விசேட போக்குவரத்து சேவையின்போது பயணிகளிடம் மேலதிக பணம் அறவிடாமல் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்றார். (ம-03)

# ரஞ்சனுக்கு நீதி கிடைக்க தொடர்ந்து செயற்படுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி

(கொழும்பு)

ரஞ்சன் ராமநாயக்க இலங்கையின் சொத்தாவார். அவருக்கு நியாயம் கிடைப்பதற்காக ஜனநாயக ரீதியிலும், சட்ட ரீதியிலும், அரசியலமைப்பிற்கு இணங்கவும் சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சிதலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

பிறந்துள்ள சித்திரைப் புத்தாண்டை ரஞ்சன் ராமநாயக்கவிற்கு சிறந்ததாக அமைய வாழ்த்துவதற்காக அவரை பார்வையிட வந்தோம்.

அவருக்காக எதிர்வரும் நாட்களில் ஜனநாயக ரீதியிலும், சட்ட ரீதியிலும், அரசியலமைப்பிற்கு அமையவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கிடைப்பதற்கு தொடர்ந்தும் நாம் முன்னின்று செயற்படுவோம்.

ரஞ்சன் ராமநாயக்க என்ற மனிதாபிமானமிக்க நபர் இந்த நாட்டின் சொத்தாவார். நாட்டு மக்களுக்காக பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளார்.

மக்கள் அதிகம் நேசிக்கும் அரசியல் தலைவரான அவருக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றார். (ம-03)

# களுத்துறை சிறையிலிருந்து கைதியொருவர் தப்பியோட்டம்

களுத்துறை சிறையில் இருந்து கைதியொருவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை வடக்கு சிரிலந்தவத்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே இவ்வாறு நேற்று மாலை தப்பிச் சென்றுள்ளார்.

கொழும்பு சங்ஸ்கா வீதியைச் சேர்ந்த காமினி வசந்த என்ற நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இந்த நபரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறைச்சாலைக் கட்டடப் பகுதியொன்றை துப்புரவு செய்து கொண்டிருந்த போது இந்த நபர் தப்பிச் சென்றுள்ளார். (ம-03)




## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 20 - 12 - 1956



உதிர்வு 18 - 03 - 2021

### அமரர் முருகுப்பிள்ளை சிவநேசன்

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)

கடந்த 18.03.2021 இறைவனடி சேர்ந்த அமரர் முருகுப்பிள்ளை சிவநேசன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி, தொலைநகல், முகநூல் மூலமும், மலர் வளையங்கள் மற்றும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபங்களைக் கூறிய உற்றார், உறவினர், பொதுமக்கள், இலக்கியவாதிகள், வங்கி ஊழியர்கள், இளைஞர் மன்றங்கள், கழகங்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 16.04.2021 (வெள்ளிக்கிழமை) காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிரியைகள் 17.04.2021 (சனிக்கிழமை) அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

(C-1972)

கலைமணி வாசிகசாலை எதிர் ஒழுங்கை,
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 19 - 11 - 1952



மறைவு 13 - 04 - 2021

எமது நண்பன் பா. நிருபராஜ் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

### கந்தையா பாலச்சந்திரன்

[ ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் ]

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடையும் நாம், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6579)

யாழ். இந்துக் கல்லூரி
2002 (உயர்தரம்) நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பிரச்சினையை தீர்ப்பதற்கு அமெரிக்கா பகிரங்கமாக தலையிட வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(நெளுக்குளம்)

**தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமெரிக்கா வின் தலையீட்டை பகிரங்கமாக அழைப்பதாக, வவுனியா வில் கடந்த 1515ஆவது நாளாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**




வருடப்பிறப்பான நேற்று அவர்களால் முன்னெடுக்கப் பட்ட போராட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்துத் தெரி வித்த அவர்கள்,

2009 ஆம் ஆண்டு முதல் காணாமல் ஆக்கப்பட்ட ஒரு குழந்தையைக்கூட நாங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆங்கிலேயரிடமிருந்து சுதந்தி ரம் பெற்றதிலிருந்து, இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதன் மூலம் எந்தவொரு தீர்வையும் காண முடியாது என்பதை நாங் கள் அறிந்து கொண்டுள்ளோம்.

எந்தவொரு தீர்வையும் அடைய தமிழர்களுக்கு தடை கள் உள்ளன. முதலாவதாக புத்த மதகுருமாரும், இரண்டா வதாக சிங்கள அரசியல்வாதி களும் உள்ளனர்.

2017 பெப்ரவரி முதல், எங் கள் போராட்டத்தில் அமெரிக்கா வின் ஈடுபாட்டைக் கேட்டு வருகிறோம்.

இலங்கைக்கான அமெரிக்க அழைப்பை பெரும்பாலான அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் சிந்தனையாளர்கள் அனைவரும் நிராகரித்தனர். இப்போது, அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் சிந்தனை யாளர்களும் ஐ.நாவில் அமெரி க்காவின் தலையீடு முக்கியமா னது என்பதை ஏற்றுக்கொள் கின்றனர்.

எனவே அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ ர்களுக்கு அரசியல் ரீதியாக உதவவும் காணாமல் ஆக்க ப்பட்ட எங்கள் அன்புக்குரிய வர்களைக் கண்டுபிடிப்பதற்கும் அமெரிக்க உதவியை பகிரங் கமாக கேட்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என மேலும் தெரிவித்தனர். (5-4-299)

# இரணைதீவு கடற்பரப்பில் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனையில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற மீன வர்கள் மீது நள்ளிரவு வேளை இரணைதீவு கடற்பரப்பில் கடற் படையினர் கடுமையாக தாக்கி யுள்ளனர்.

மன்னார் பள்ளிமுனை கடற்கரையில் இருந்து படகு ஒன்றில் 4 மீனவர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கடற்றொழிலுக்குச் சென்றுள்ளனர்.

கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் பள்ளிமுனை கடற் கரையில் உள்ள கடற்படை யினரின் சோதனை மற்றும் பதிவுகளை மேற்கொண்ட நிலையில் கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இதன்போது நள்ளிரவு 12 மணியளவில் இரணைதீவு கடற்பரப்பில் வைத்து கடல் ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர் குறித்த படகை நிறுத்தி சோதனையிட்டதோடு தேவையற்ற காரணத்தை கூறி குறித்த 4 மீனவர்களை யும் சுமார் 3 மணி நேரம் கட லில் தடுத்து வைத்ததாகவும் பின்னர் கடற்படையினர் கொண்டு வந்த தடியினால் மீனவர்களைத் தாக்கியதோடு மீனவர்களின் உடைமைக ளையும் பறித்துச் சென்ற தாகவும் தெரிவிக்கப்படுகின் றது. (5-4-285)

# இஸ்லாமிய அமைப்புக்களுக்குத் தடை வெளியானது வர்த்தமானி அறிவித்தல்

(கொழும்பு)

11 இஸ்லாமிய அமைப்பு களை தடை செய்வது தொட ர்பான வர்த்தமானி அறி வித்தல் வெளியானது.

உயிர்த்த ஞாயிறு தாக் குதல் தொடர்பான ஜனா திபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்து ரைகளுக்கு அமைய குறி த்த அமைப்புகளுக்கு தடை விதிக்க சட்டமா அதிபர் அண்மையில் அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

இதையடுத்து நேற்று அதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியா னது.

அதன்படி ஐக்கிய தௌஹீத் ஜமாஅத் , சிலோன் தௌஹீத் ஜமா அத் ,சிறிலங்கா தௌஹீத் ஜமாஅத் ,அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத் ,ஜம இய்யதுல் அன்சாரி சுன் னத்துல் மொஹமதியா ,தாருல் அதர்-ஜம்உல் அதர் சிறி லங்கா இஸ்லாமிய மாண வர் சங்கம் -ஜமியா ,ஐ.எஸ் அமைப்பு ,அல் கொய்தா ,சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு ,சுப்பர் முஸ்லிம் அமைப்பு ஆகிய 11 அமைப்புக்களுக்கே தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# ரம்ழான் பண்டிகையின் போது கஞ்சி வழங்கத் தடை

(கொழும்பு)

ரம்ழான் பண்டிகையி னைக் கொண்டாடும் போது முஸ்லிம் பள்ளிவாசல்களில் கடைப்பிடிக்க வேண்டிய 30 சுகாதார பாதுகாப்பு விதிமுறை கள் அடங்கிய சுற்றுநிருபம் சுகாதார அமைச்சினால் வெளி யிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தனவினால் இந்த சுற்றுநிருபம் வெளியிடப் பட்டுள்ளது.

அதற்கமைய பள்ளிவாசல் களில் 18 வயதுக்கு மேற்பட் டோர் மாத்திரமே வழிபாடு களுக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளதுடன் பள்ளிவாசல் வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் அளவுக்கதிகமானோர் கூடு வதற்கு இடமளிக்கப்படக் கூடாது என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் வழிபாடுகளின் போது நிச்சயம் தனிநபர் இடை வெளி பேணப்பட வேண்டும். சமூக இடைவெளியைக் கருத் திற் கொண்டு 100 பேரைவிடக் குறைவானோரே அனுமதிக் கப்பட வேண்டும் என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

நோன்பு காலங்களில் வழ ங்கப்படும் "கஞ்சி" இம்முறை வழங்கப்படக் கூடாது. அத் தோடு பள்ளிவாசலுக்கு வருகை தருபவர்களுக்கு அடிப் படைச் சுகாதார விதிமுறை களைப் பின்பற்றுவதற்கான ஏற் பாடுகள் செய்து கொடுக்கப்பட் டிருக்க வேண்டும் என்பதோடு ஊழியர்களும் அவற்றை கடை ப்பிடிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)



நல்லூர் கந்தசுவாமி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டு விசேட பூஜை நிகழ்வுகள்.

(படம்:- ஐ.சிவசாந்தன்)

# புத்தாண்டுக் கொடுப்பனவை இன்றும் பெற்றுக் கொள்ளலாம்




(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வழங்கப்படும் ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவுகளை, இதுவரை பெற்றுக் கொள்ளாத நபர்கள், அதனை இன்று பெற்றுக்கொள்ள முடியும் என சமுர்த்தி அபிவிருத்தித் திணை க்களம் தெரிவித்துள்ளது.

புத்தாண்டை அடிப்படை யாகக் கொண்டு, கொரோனாத் தொற்று பரவலினால் பாதிப் பிற்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங் களுக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டம் நாடு பூராக வும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை அந்தக் கொடுப் பனவைப் பெற்றுக் கொள் ளாத நபர்கள், இன்று அத னைப் பெற்றுக் கொள்ள முடி யும் என சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்து ள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தா ஸ்ரார் வெற்றிக்கிண்ணம்- 2021 விக்டோறி அணி 2 வது சுற்றுக்கு தகுதி

மேற்படி வெற்றிக்கிண்ணத்திற்காக ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் 1 ஆவது ஆண்டாக நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 1 ஆவது சுற்றில் 6 ஆவது போட்டி கடந்த மாதம் 21 ஆம் திகதி ஸ்கந்த வரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் விக்டோறி அணி, நியூஸ்ரார் அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது.

கிரிஷாந்-11, பிரசாந்-30, பிரசாத்-12, ரம்மியராகுலன்-73, ஓட்டங்களைப் பெற்றனர். ஐங்கரன்-03, சரத்குமார்-02 பிரணவன்-01, தர்ஸன்-01 இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்டோறி அணி 25.3 ஓவர்களில் 06 இலக்குகளை




இழந்து 186 ஓட்டங்களை பெற்றது.

மதனபிரியன்-30, பிரணவன்-22, தர்ஸன்-36, சரத்குமார் ஆட்டமிழக்காது 31, சஞ்சீலன்-14 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் பிரஷாத், ராகுலன் தலா 02 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் நியூஸ்ரார் அணியை சார்ந்த ரம்மியராகுலன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# 34 ஆவது ரூபவாகினி கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் 34 ஆவது ரூபவாகினி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த 10 ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் இணைந்து குறித்த போட்டியினை ஏற்பாடு செய்திருந்தனர். குறித்த போட்டியில் ஆண்கள் அணியில் 11 அணிகளும் பெண்கள் அணியில் 04 அணிகளும் கலந்து கொண்டு போட்டிகளில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் இறுதிப்போட்டிக்கு கரைதுறைப்பற்று பிரதேச அணியும் துணுக்காய் பிரதேச அணியும் தெரிவாகி இருந்தது. இதனடிப்படையில் இறுதிப்போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச அணி துணுக்காய் அணியை வீழ்த்தி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் இறுதிப் போட்டியில் முதலாவது இடத்தை பெற்றுக் கொண்ட கரைதுறைப்பற்று பெண்கள் அணிக்கு 7500 ரூபாய் பணப்பரிசும் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட துணுக்காய் பிரதேச பெண்கள் அணிக்கு 5000 ரூபாய் பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அதேபோன்று ஆண்களுக்கான போட்டியிலே கரைதுறைப் பற்று பிரதேச அணியும் மணலாறு பிரதேச அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இருந்தன. இதனடிப்படையில் இறுதிப் போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச அணி மணலாறு அணியை வீழ்த்தி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் கரைதுறைப் பற்று பிரதேச அணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு 7500 ரூபாய்பணப் பரிசினையும் மணலாறு அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு ஐயாயிரம் ரூபா பணத்தையும் பெற்றுக்கொண்டனர்.(4-6-281)





தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இளம்தாரகை விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தருமபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. குறிஞ்சி அணியினரும் சிகரம் அணியினரும் மோதினர். வெற்றிக் கிண்ணத்தினை குறிஞ்சி அணியினர் சுவீகரித்தனர்.

([illegible] - தேவானந்தன்)

# ஐ.பி.எல்.தொடரில் காயம் காரணமாக பென்ஸ்டோக்ஸ் விலகல்

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக இங்கிலாந்து கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ஓல்ரவுண்டர் பென்ஸ்டோக்ஸ் விளையாடி வருகிறார்.

கடந்த 12 ஆம் திகதி பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வீரரான பென்ஸ்டோக்ஸிற்கு கை விரலில் காயம் ஏற்பட்டது.

இந்நிலையில், கை விரலில் முறிவு ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளதை தொடர்ந்து நடப்பு ஐ.பி.எல். தொடரில் இருந்து பென்ஸ்டோக்ஸ் விலகியுள்ளார்.



பென்ஸ்டோக்ஸ் அணியில் இருந்து விலகியது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு கடும் பின்னடைவாக பார்க்கப் படுகிறது. (4-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆளும் கூட்டணிக்குள் மோதல் வலுத்தது உண்மையே

## ஒப்புக்கொண்டார் மகிந்தானந்த

(கொழும்பு)

**அரச கூட்டணிக்குள் கருத்து மோதல் உச்சத்தில் இருப்பது உண்மைதான். மாகாண சபைத் தேர்தலை முறைமை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி முன்வைத்த திட்டத்துக்கு பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.**

எனவே, எதிர்வரும் 19 ஆம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. அதன் பின்னர் சுமுக நிலை உருவாகும். இவ்வாறு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள மோதல் நிலை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரச கூட்டணியில் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் கொள்கைகள் இருக்கின்றன.

எனவே, கொள்கை ரீதியான முரண்பாடொன்று தற்போது ஏற்பட்டுள்ளது. அதுவும் குறிப்பாக மாகாண சபைத் தேர்தலை மையப்படுத்தியே அந்தப் பிரச்சினை எழுந்துள்ளது.

70 இற்கும் 30 என்ற அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கான திட்டம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரு தொகுதியில் ஒரு கட்சி மூவரை நிறுத்தலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த யோசனைக்கே பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் பேச்சு நடத்தி இணக்கப்பாடொன்றுக்கு வரமுடியும் என நம்புகின்றோம்.

பிரதமர் தலைமையில் 19 ஆம் திகதி நடைபெறும் சந்திப்பில் இணக்கப்பாடு எட்டப்படலாம். மாகாண சபைகளுக்கான தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். ஒன்றாக இணைந்தே மே தினம் அனுஷ்டிக்கப்படும்.

பங்காளிக் கட்சிகள் தனியாக நிகழ்வுகளை நடத்த மாட்டாது. கருத்து மோதல் பேச்சு மூலம் தீர்க்கப்படும். கூட்டணியாக முன்னோக்கி பயணிப்போம்" என அவர் தெரிவித்தார். (நி-4)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழர் கலாசார மன்றத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் மாபெரும் சித்திரை வருடப் பிறப்பு பொங்கல் விழாவும் சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று புதன்கிழமை காலை கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஞானவைரவப் பெருமான் ஆலய முன்றலில் நடைபெற்றது. அதிபர் ரட்ணம் செந்தில்மாறனின் அனுமதியுடன் கல்லூரியின் தமிழர் கலாசார மன்றத்தின் தலைவர் செல்வ விக்னேஸ்வரராஜா கோபிகிஷாந்த் தலைமையில் நடைபெற்றது. (படம்:ரவிசாந்)

# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சித்திரை புத்தாண்டு வழிபாடு



(மன்னார்)

தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள ஆலயங்களில் நேற்று புதன்கிழமை காலை முதல் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

இந்த நிலையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் மாவட்டத்தில் பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்று புதன்கிழமை காலை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

பிலவ வருட சிறப்பு பூஜையினை ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கருணாநந்த குருக்கள் நடத்தி வைத்தார். சுபவேளையில் விசேட அபிஷேகம் நடத்தப்பட்டு தொடர்ந்து விசேட பூஜைகள் நடைபெற்றன. இதன் போது பிலவ வருட புத்தாண்டை முன்னிட்டு பக்தர்களுக்கு கைவிசேடம் வழங்கப்பட்டதுடன் ஆசிர்வாதமும் வழங்கப்பட்டது.

கொரோனா தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பக்தர்கள் கலந்து கொண்டதோடு, சுகாதார நடைமுறைகளுடன் புத்தாண்டு சிறப்பு பூஜைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# மூளாய் பிள்ளையார் கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் வதிரன் புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 15 ஆம் திகதி காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

இம் மகோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (5)

## ஆங்கில ஆசான்

# சிவசுப்பிரமணியம் காலமானார்

(யாழ்ப்பாணம்)



ஈழத்தின் புகழ் பூத்த ஆங்கில விற்பன்னர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் நேற்று முன்தினம் காலமானார்.

தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச், இலத்தீன் ஆகிய மொழிகளில் மிகுந்த பாண்டித்தியம் மிக்க அன்னார் ஈழத்தில் பல்துறை சார் அறிஞர்களுக்கும் ஆங்கில மொழியினைப் போதித்ததோடு இந்தியாவில் லோயலா கல்லூரியிலும் ஆங்கில விரிவுரையாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# பல இலட்சம் பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் திருட்டு

(சாவகச்சேரி)


சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கணனிக்கூடம் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

குறித்த திருட்டு சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது கணனிகள், பல்லூடக எறிகோட்டி மற்றும் அச்சுப்பொறிகள் உள்ளடங்கிய பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

அத்துடன் மேலும் சில பொருட்கள் கொண்டு செல்லத் தயாராக பொதி செய்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டன.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கல்லூரி நிர்வாகத்தால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (5-4-30)

# மஞ்சள் கட்டி மூடைகளுடன் மன்னாரை சேர்ந்த ஐவர் கைது



(மன்னார்)

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாரிற்கு கடத்திவரப்பட்ட 1989 கிலோ கிராம் மஞ்சள் கட்டி மூடைகளுடன் மன்னாரைச் சேர்ந்த 5 நபர்களை நேற்று புதன்கிழமை மூன்றாம்பிட்டி பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாரிற்கு மஞ்சள் கட்டி மூடைகள் கடத்தப்படுவதாக இலுப்பைக் கடவைப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட இலுப்பைக்கடவை பொலிஸார் வாகனம் ஒன்றில் கடத்திவரப்பட்ட குறித்த மஞ்சள் கட்டி மூடைகளை கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட மஞ் சள் கட்டி மூடைகள் மற்றும் வாகனம் என்பன இலுப்பைக் கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, கைது செய்யப்பட்ட குறித்த 5 நபர்களும் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (5-4-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் - 2021



## அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

இலங்கையில் தமிழ் மக்கள் 1958 முதல் இனக் கலவரங்களினாலும் இனப் போரினாலும் பல இலட்சம் மக்களைப் பலிகொடுத்துவிட்டும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் இன விடுதலையுமின்றி தினமும் பௌத்த சிங்கள ஆட்சிகளினால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களாய் தங்கள் தேசத்தினதும் மக்களின் பாதுகாப்பற்ற மனிதர்களாய் அவலத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர்.

இருப்பினும் தங்கள் இன விடுதலைக்காகவும் தங்கள் தமிழ்த்தேசத்தின் விடுதலைக்காகவும் தினமும் போராடிக்கொண்டேயிருக்கின்றனர். எவ்வாறெனினும் தைப்பொங்கல் கொண்டாட்டங்களின் போது தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற திடசங்கற்பத்தோடு சித்திரைப் புத்தாண்டையும் புத்தெழுச்சியுடன் கொண்டாடுங்கள்.

பிலவ சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை அனைவருடனும் பங்குகொண்டு வாழ்த்தி நிற்கின்றோம்.

**மாவை.சோ.சேனாதிராசா.**
**தலைவர், இ.த.அ.கட்சி**
**துணைத்தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**



## கொரோனா பெருந்தொற்றிலிருந்து விடுபடும் ஆண்டாக அமையட்டும்

தமிழினம் தைப்பொங்கல் திருநாளைத் தமிழ்ப்புத்தாண்டின் தொடக்கமாகக் கொண்டாடிவரும் அதேவேளை சித்திரைப் புத்தாண்டையும் தமிழர்களின் ஓர் திருநாளாகக் கொண்டாடுவதை மரபாகக் கொண்டிருக்கிறது. பிலவ் என்ற பெயருடன் பிறந்துள்ள இச்சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு கடந்த ஆண்டு மனுக்குலத்தை ஆட்டிப்படைக்கத் தொடங்கிய கொரோனாப் பெருங்கொள்ளை நோயிலிருந்து உலகம் விடுபடாத நிலையிலும், திரட்சி பெற்றுள்ள சிங்கள, பௌத்த பேரினவாதத்திலிருந்து ஈழத் தமிழினம் விடுபடாத நிலையிலும் பிறந்திருக்கிறது. பெருங்கொரோனாத் தொற்றிலிருந்தும் பேரினவாத ஆக்கிரமிப்பிலிருந்தும் தமிழினம் விடுபடும் ஆண்டாகப் பிலவ வருடம் அமையட்டும்.

மனிதன் இப்பூமி தனக்குரியது மாத்திரமே என்ற மனித மையவாதச் சிந்தனையின் வயப்பட்டு இயற்கையின் பல்வகைமைத் தன்மையை நிராகரித்து வருகிறான். மனிதன் உயிரினங்களை அழித்தும், இயற்கை வளங்களைச் சூறையாடியும் பூமித்தாயில் ஓர் ஒட்டுண்ணியாக வாழ்வதன் விளைவாக இயற்கை தன்னைப் பேரழிவிலிருந்து காப்பாற்றி ஏனைய உயிர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.இதற்கான எச்சரிக்கையே கொரோனா வைரஸின் பிரசவம் ஆகும். கொரோனா பெரும் கொள்ளை நோயிலிருந்து விடுபடவும் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடவும் இப்புத்தாண்டு நாளில் இயற்கை என்ற பேரிறைவனை பிரார்த்திப் போமாக.

**பொ.ஐங்கரநேசன்**
**தலைவர்,தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்.**



## சுபீட்சம் நிறைந்த ஆண்டாக பிலவ வருடம் அமையும்

கடந்த ஆண்டு தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல அனைத்து உலக மக்களுக்கும் கொவிட் பெரும் தொற்றுக் காரணமாக ஒரு துரதிர்ஷ்டவசமாக ஏமாற்றம் நிறைந்த ஆண்டாக கடந்து சென்று விட்டது. பிலவ வருடம் நோய் நொடிகளில் இருந்து விடுபட்டு தமிழ் மக்கள் உரிமைகளையும் சுபீட்சத்தையும் மேன்மையையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் நான் மாநகரத்தின் பொறுப்பை இவ்வாண்டு தைமாதமளவில் ஏற்றுக்கொண்டிருந்தேன். பல்வேறு நெருக்கடிகள், அழுத்தங்கள் மற்றும் கைது ஆகியவற்றுக்கு மத்தியிலும் எனது பயணம் உறுதியுடன் தொடர்கின்றது. இந்த மாநகரத்தை தூய்மையாகவும் அழகாகவும் பேணுவதற்கு என்னால் ஆன சகல முயற்சிகளையும் முன்னெடுப்பேன். மாநகர மக்கள் அனைவரும் எனது இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவது மட்டுமல்லாது பக்க பலமாகவும் உறுதுணையாகவும் என்னுடன் இருக்க வேண்டும் என்று அன்போடும் உரிமையோடும் வேண்டுகின்றேன். அனைவருக்கும் எனது இதயம் கனிந்த தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**மாநகர முதல்வர்,**
**யாழ்.மாநகர சபை.**



## இவ் வருடத்தில் தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேறட்டும்

பிலவ வருடம் தமிழ் மக்கள் தமக்கான உரிமைகள் கிடைக்கப் பெற்று நீதி நிலைநாட்டப்பட்டு சாந்தியையும் சமாதானத்தையும் கொண்டு வருவதாக அமையட்டும்.

ஒவ்வொரு புதுவருடத்திலும் மாற்றங்கள் ஏற்படும். தமிழ் மக்களுக்கு புதுவாழ்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்த போதிலும் ஆதிக்க சக்திகளின் ஆணவமும் அரஜாகப் போக்குமே அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

உலகையே ஆட்டிப்படைக்கும் கொள்ளை நோயான கொரோனா தற்பொழுது இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களையும் ஆட்டிப்படைக்கத் தொடங்கியிருக்கிறது. எனவே எமது மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு புதுவருடத்திலும் ஒவ்வொரு பண்டிகைக்காலத்திலும் தென்னிலங்கை அரசியல்வாதிகளிடமிருந்து வருகின்ற உதட்டளவிலான வாழ்த்துகளிலிருந்து இந்தப் புதுவருட வாழ்த்தாவது இதயத்திலிருந்து வெளிவர வேண்டுமென்று விரும்புகிறோம்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எமது பிலவ வருட புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**சுரேஷ் க.பிறேமச்சந்திரன்**
**தலைவர்**
**ஈமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.**

## அனைவருக்கும் சிறப்பான ஆண்டாக மலரட்டும்

மலரும் பிலவ வருட புத்தாண்டு அனைவருக்கும் சிறப்பு மிக்க ஆண் டாக மலரட்டும் .

இப் புதிய வருடமான பிலவ வருடமானது உலகில் உள்ள அனைத்து தமிழ் மக்களிற்கும் நல்லதோர் ஆண்டாக இருக்க வேண்டும். பல சோதனைகளையும் துன்பங்களையும் அனுபவித்த ஆண்டா னது கடந்து புதிய வருடத்திலே அனைவரும் காலடி எடுத்து வைக்கின்றோம்.

இந்த் ஆண்டு உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் மேன்மை அடைகின்ற ஆண்டாக மலர வேண்டும் என்பதே அனைவரது எண்ணங்களுமாகும்.

அனைத்து தமிழ் மக்களுக்கும் மகிழ்வினைத் தருகின்ற ஆண்டாக விவசாயத்தில் சிறக்கும் ஆண்டாக அமையவும் நோயற்ற வாழ் வினையும் குறைவற்ற செல்வத்தினையும் தரு வதாகவும் உயிர்களிடத்தே அன்பு பெருகவும் இல்லாத மனிதர்களுக்கெல்லாம் உதவிகள் புரிந்து அவர்களும் மேன்மையடையவும் முடிந்தவரை இயலாதிருப்போர்க்கு ஈய்ந்து மன நிம்மதிகளை பெறுவதோடு எல்லோருக்கும் ஏமது புத்தாண்டு நல் வாழ்த்துகளும் ஆசிகளும் கூறி நிற்கின்றேன்.

**ஜெ.மயூரக்குருக்கள்**
**தலைவர்,**
**சர்வதேச இந்து இளைஞர் பேரவை.**



## புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இது தமிழ் மக்களுக்கு நல்தொரு விடிவைத் தருகின்ற புது ஆண்டாக மலர்ந்திருக்கின்றது.

புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்தவர்கள் பெரும் பாக்கியசாலிக்ள். இனிமேலாவது நமது மக்கள் சுகமாகவும் சுபீட்சமாகவும் மங்களகரமாகவும் வாழ்வதற்கு வழிபிறக்க வேண்டும்.

இன,மொழி,மத வேறுபாடின்றி எல்லோரும் சமத் து வமாக, சந்தோசமாக ஒற்றுமையாக வாழவதற்கு இறை ஆசி கிட்ட வேண்டும். மனதிலே சஞ்சல ங்கள், சங்கடங்க்ள், துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், இடுக்கண்கள் என்று எதுவுமே இருக்கக் கூடாது. இன்று முதல் அனைத்து மக்களின் மனங்களும் சலனமேதுமின்றி ஒருமனதாகி ஒற்று மையே பலம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை நினைத்து எல்லோரும் வாழவேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் செயற்படத்துவங்க வேண்டும்.

இன்று பிறந்துள்ள "பிலவ" ஆண்டானது எல்லோருக்கும் நல் வாழ்வைத் தருகின்ற சிறந்த ஆண்டாக மலர வேண்டும் என்று ஆசிகள் நல்கி உளமார இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். துன்பதுயரங்கள, நோய் நொடிகள் முற்றாக விலகி எல்லோருடைய நெஞ்சங்களும் மகிழ்ச்சியாய் நிறைய் எல்லாம் வல்ல வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் பரிபூரண கிருபாகடாட்சம் அருள வேண்டுமென்று மனதாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

"புத்தாண்டே வருக! அனைவருக்கும் புதுவாழ்வு தருக!!"

**இராசையா ஸ்ரீதரன்,**
**.ஆதீன சமயப் பிரசாரகர்.**

## தமிழ் மக்களுக்கு சுபீட்சமான எதிர்காலம் கிட்ட வேண்டும்

உதயமாகும் பிலவ புதுவருடத்தில் தமிழ் மக்களுக்கு சுபீட்சகரமான எதிர்காலம் கிட்ட வேண்டும் எனவும் சகல வளமும் நலமும் நிறைந்த வாழ்க்கை அமைய வேண்டும் எனவும் எல்லாம்வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

கடந்த பல மாதங்களுக்கு மேலாக உலகையே புரட்டிப் போட்டுள்ள கொரோனா பெருந்தொற்று அச்சுறுத்தல் இன்னும் ஓயவில்லை. உலகின் பல நாடுகளில் கொரோனாவின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அலைகள் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளதை செய்திகள் வாயிலாக நாம் அனைவரும் அறிந்து வருகின்றோம். வந்தபின் அல்லற்படாது வருமுன் காத்து வாழ்வதே சிறந்த செயல் என்பதை நினைவிற்கொண்டு தத்தம் சுகாதார நலன் கருதி, பாதுகாப்புடன் வாழ வேண்டும்.

தமிழ் மக்களது வாழ்நாளில் தொடரும் துயரநிலை முற்றாக நீங்கி, உதயமாகும் புதுவருடத்தில் ஒளிமயமானதொரு எதிர்காலம் எம்மக்களுக்கு கிட்ட வேண்டும் எனவும் மக்களின் நல்ல எதிர்காலத்திற்கென அரசாங்கமும் நல்லெண்ண நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் எல்லாம்வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**வே.கந்தசாமி, பொதுச் செயலாளர்.**

## கடந்து போ-தொடர்ந்து வா!

கடந்து செல் சார்வரியே
எம்மைத் தொடர்ந்து வா பிலவ வருடமே
முடிந்தவை எல்லாம் முடிந்து போக
இனி நல்லவையாகவே நடைபெறவே
கட்ந்து போ "சார்வரியே"
எமைத் தொடர்ந்து வா "பிலவ" வே

**ஜெனா**
**ஊரெழு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுஷிமா அணு உலை கழிவு நீரை கடலில் திறந்துவிட ஜப்பான் முடிவு

(டோக்கியோ)

**ஜப்பானை 2011 ஆம் ஆண்டு தாக்கிய சுனாமியால் உருக்குலைந்து போன புகுஷிமா அணு உலையின் கழிவு நீரை கடலில் திறந்து விட அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.**

ஜப்பானில் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி ரிக்டர் அளவுகோலில் 9.0 புள்ளிகள் அளவில் அதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு சுனாமி தாக்கியது. இதில் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர்.

மேலும் உலகிலேயே பாதுகாப்பான அணு உலையாகக் கருதப்பட்ட புகுஷிமாவின் டாய்ச்சி அணு உலைக்குள் கடல்நீர் புகுந்தது.

மின்சாரம் உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்கள் செயலிழந்ததால் உலைகளை குளிர்விக்க மின்சாரம் இல்லாமல் போனது. இதனால் 6 யுனிட்களில் 3 யுனிட்கள் சேதம் அடைந்தன. இதனால் சுற்றியுள்ள பகுதிகளில் கதிர்வீச்சு தாக்கியது.

1986 ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட செர்னோபில் அணு உலை விபத்தை தொடர்ந்து உலகிலேயே 2 ஆவது மிகப்பெரிய அணு உலை விபத்தாக வரலாற்றில் இது பதிவானது.

10 ஆண்டுகள் கடந்தும் மக்கள் வசிக்க முடியாத அளவிற்கு கதிர்வீச்சின் தாக்கத்தை இன்னமும் கக்கிக் கொண்டிருக்கிறது அந்த உலை.

இதனிடையே புகுஷிமா அணு உலையில் உள்ள அணு கழிவுகளை பாதுகாப்பாக அகற்றிவிட்டு அந்த அணு உலையை முழுமையாக செயலிழக்கச் செய்யும் பணிகளில் டெப்கோ என்ற நிறுவனம் ஈடு



பட்டுள்ளது.

அந்த வகையில் புகுஷிமா அணு உலையில் அணு கழிவுகள் நிறைந்த சுமார் 1 இலட்சத்து 25 ஆயிரம் தொன் கழிவு நீர் முற்றிலுமாக சுத்திகரிக்கப்பட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொட்டிகளில் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அணு கழிவுகள் அகற்றப்பட்ட இந்த கழிவு நீரை கடலில் திறந்து விட ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளது.

அதேசமயம் ஜப்பான் அரசின் இந்த முடிவுக்கு சீனா கடும் எதிர்ப்பு. உள்ளூர் மீனவர்களும் அந்த நாட்டின் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் பலரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அணு உலையின் கழிவு நீரை கடலில் கலந்தால் அது கடல் வளத்தை முற்றிலுமாக அழிக்க வாய்ப்புள்ளது என்றும் மேலும் அது மனித மரபணுவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கிரீன்பீஸ் என்கிற சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்பு எச்சரித்துள்ளது. (நி-4)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: செவ் 11 சூரி 10 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Business Low (London)
எதிர்பார்ப்பு: லண்டன்.சுவிஸ் வெளிநாடு
தொ.இ: B/11769

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 22 3/4 செவ், சூரி 2 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்: BA, ஆசிரியர் அரசியல்
எதிர்பார்ப்பு: சைவபோசன பெண் விரும்பத்தக்கது. அரசாங்க உத்தியோகம்
தொ.இ: B/11771

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: - செவ் 6 சூரி 9 இல் உயரம்: 175cm
தகைமை/தொழில்: A/L வியாபாரம் மதுராமாளிகை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11773

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: - செவ் 6 சூரி 9 இல் உயரம்: 175cm
தகைமை/தொழில்: A/L, வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11774

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 18 செவ் 7 சூரி 12 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்:. B.A, புதிய குடியவர்களுக்கான ஆலோசகர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, Canada, London, U.S.A
தொ.இ: G/3491

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 50 செவ் 5 சூரி 11 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.A. Work- A.O
எதிர்பார்ப்பு: இன்சினியர், வங்கி உதவி முகாமையாளர், வெளிநாடும் எதிர்பார்க்கலாம்
தொ.இ: G/3498

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 24.25 செவ் 1 சூரி 12 இல்
உயரம்: 5'4 1/2"
தகைமை/தொழில்: BSc I.T அரச ஆசிரியை
எதிர்பார்ப்பு: கட்டாயம் பட்டதாரி ஆக இருக்க வேண்டும், வெளிநாடும் பார்க்கலாம்
தொ.இ: G/3610

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 32 1/2 செவ் 12 சூரி 10 இல் உயரம்: 160cm
தகைமை/தொழில்: B.A அபிவிருத்தி உத்தியோகம்
எதிர்பார்ப்பு: அரசாங்கத்தொழில் விரும்பத்தக்கது வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ: G/3618

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# கொரோனா பரவல் எதிரொலி திருப்பதியில் பக்தர்கள் எண்ணிக்கை வெகுவாக குறைந்தது

(டில்லி)

ஆந்திரா மாநிலம் சித்தூரில் நாளுக்கு நாள் கொரோனா பரவல் அதிகரித்து வருகிறது. இதனால் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளது. திருப்பதியில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் அதனை தடுக்கும் விதமாக நேற்று முன்தினம் முதல் இலவச தரிசனம் இரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் திருப்பதியில் 209 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் திருப்பதி நகரில் கொரோனா கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொரோனா பரவல் அதிகரித்துள்ளதால் ஆந்திரா மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து திருப்பதிக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. (நி-4)

# தமிழ் பண்பாட்டின் மகத்துவம் தொடர்ந்து ஒளிரட்டும் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மோடி


(டில்லி)

தமிழ் பண்பாட்டின் மகத்துவம் தொடர்ந்து ஒளிரட்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்ததுள்ளார்.

பிறந்திருக்கின்ற பிலவ புத்தாண்டை மக்கள் அனைவரும் வெகு விமர்சையாகக் கொண்டாடி வருகின்றனர்.

பல தலைவர்களும் வாழ்த்துக்களை பகிர்ந்து வருகின்றனர். அந்த வகையில் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து தெரிவித்துள்ள அவர், "தமிழகத்து சகோதர, சகோதரிகளுக்கும், உலகம் எங்கும் உள்ள தமிழர்களுக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். தமிழ் பண்பாட்டின் மகத்துவம் தொடர்ந்து ஒளிரட்டும்.



புத்தாண்டு ஒவ்வொருவரின் வாழ்விலும் ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் மகிழ்ச்சியையும் நிறைக்க இந்த மகிழ்ச்சியான திருநாளில் பிரார்த்திக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவுகளை மதிப்பீடு செய்துவிட்டு இழப்பீடுகளை பெற்றுத் தருவதில்லை

## விவசாயிகள் குற்றச்சாட்டு

**(அக்கராயன்)**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்பயிர் அழிவுகள் மதிப்பீடுகளை மேற்கொள்கின்ற அதிகாரிகள் இழப்பீடுகளை விரைவாகப் பெற்றுத் தருவதில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், மேலதிக மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் தலைமைகளில் நடைபெறுகின்ற சிறுபோகக் கூட்டங்களில் இத்தகவல்கள் விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றன.

இயற்கை அனர்த்தங்களினாலும் யானைகள் உட்பட காட்டு விலங்குகளினாலும் நெற்பயிர்ச் செய்கை அழிவடைகின்ற போது மதிப்பீடுகள் செய்கின்ற அதிகாரிகள் இழப்பீடுகளை விரைவாக பெற்றுத் தருவதில்லை எனவும் இழப்பீடுகளை விரைவாக பெற்றுத் தரும்போது தான் விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளை வேகமாக முன்னெடுக்க முடியும் எனவும் இயற்கை அனர்த்தங்கள் நெற்பயிர்ச் செய்கை அழிவுகளை ஏற்படுத்தினாலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைகளினாலே கூடுதலான பயிர்கள் அழிக்கப்படுகின்றன.

ஆனால் அழிவுகளை பதிவு செய்யும் அதிகாரிகள் இழப்பீடுகளை விரைவாகப் பெற்றுத்தருவதில்லை. நெற்பயிர் மட்டுமல்ல நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் யானைகளினால் அழிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இதற்கான இழப்பீடுகள் கிடைப்பதில்லை எனவும் சிறுபோகக் கூட்டங்களில் விவசாயிகள் தெரிவித்து வருகின்றனர். (5-4-350)

# மாந்தை கிழக்கிற்கான இ.போ.ச.சேவை ஆரம்பம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிற்கான இலங்கை போக்குவரத்து பேருந்து சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக மாந்தை கிழக்கிற்கு நடைபெற்று வந்த ஒரேயொரு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதன்காரணமாக மாந்தை கிழக்கிற்குப் பணிக்குச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டனர்.

தற்போது அப்பேருந்து சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து துணுக்காய் சென்று பின்பு மாந்தை கிழக்கு பாண்டியன்குளத்திற்கு செல்லும். பின்னர் பிற்பகலில் அதே வழித்தடம் ஊடாக யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணிக்கும். இதேவேளை மாந்தை கிழக்கிற்கான தனியார் பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை என பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

காலையில் வருகின்ற தனியார் பேருந்து மாலையில் வருவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனி பிரதேச செயலாளர் பிரிவான மாந்தை கிழக்கிற்கான பேருந்து சேவைகள் இடம் பெறாதது தொடர்பாக மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் தீர்வுகாணப்படாத பிரச்சினைகளாக காணப்படுகின்றன.

இதன்காரணமாக மாந்தை கிழக்கில் உள்ள மாணவர்கள், பொது மக்கள், உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். (5-4-350)

# கால்நடை வைத்தியர் இல்லை; இறந்து மடியும் கால்நடைகள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் கால்நடை வைத்தியர் இல்லாததன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மாந்தை கிழக்கில் நிரந்தர கால்நடை வைத்தியர் இல்லை. முல்லைத்தீவில் இருந்து வாரத்தில் ஒரு தடவை கால்நடை வைத்தியர் வருகை தருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் மாந்தை கிழக்கில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ள போதிலும் நிரந்தர கால்நடை வைத்தியர் இல்லாததன் காரணமாக கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்படுகின்ற போது கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

கால்நடை வைத்தியர் இல்லாததன் காரணமாக கால்நடைகள் நோய்களினால் கூடுதலாக உயிரிழப்பதாகவும் கால்நடைகளுக்கான நிரந்தர கால்நடை வைத்தியரை மாந்தை கிழக்கில் நியமிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (5-4-350)

## மர்மமான முறையில் நின்ற காரால்

# இயக்கச்சியில் பரபரப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சிபளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஆள் இல்லாத கார் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சந்தேகத்திற்கிடமான முறையில் கார் ஒன்று ஆள் இல்லாமல் நிற்பதை அவதானித்த சிலர் பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

அதனையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற பளை பொலிஸாரும் இராணுவத்தினரும் காரை சோதனையிட்ட போது காரின் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன.

அதனையடுத்து பொலிஸார் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கினர்.



இதனையடுத்து நேற்றுக்காலை விசேட அதிரடிப் படையின் உதவியுடன் காரின் கதவுகள் திறக்கப்பட்டு பரிசோதனையிடப்பட்ட போது காரின் பல பாகங்கள் திருட்டுப் போயுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

இதுவரையில் எவரும் இது தொடர்பாக கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-316)

## யாழ். நோக்கி வந்த யாழ்தேவிக்கு இயந்திரக் கோளாறு

(குருமன்காடு)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த யாழ்தேவி புகையிரதம் இயந்திரக் கோளாறு காரணமாக ஓமந்தை புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் காலை 6.25 மணியளவில் புறப்பட்ட யாழ்தேவி புகையிரதம் வவுனியா, ஓமந்தையை கடந்து புளியங்குளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது இயந்திரக் கோளாறு காரணமாக செயலிழந்தது.

இதனையடுத்து குறித்த புகையிரதம் இழுத்து வரப்பட்டு ஓமந்தை புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் குறித்த புகையிரதத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொடிகாமம் உள்ளிட்ட வடக்கின் பல்வேறு பகுதிகளுக்கு பயணித்த பயணிகள் பலரும் ஓமந்தையில் தங்கியுள்ளனர். அவர்களை கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி வரும் புகையிரதத்தில் மாற்றி ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதுடன், செயலிழந்த புகையிரத இன்ஜினை திருத்துவதற்கான வேலைகளையும் புகையிரத திணைக்கள தொழில் நுட்ப பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (5-4-290)

# மதுபோதையில் இருந்தோர் மாணவர்கள் மீது தாக்குதல்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ-35 வீதி முரசுமோட்டை பகுதியில் பொங்கல் பொருட்கள் வாங்கச் சென்ற பாடசாலை மாணவன் உட்பட மூவர் மீது மதுபோதையில் இருந்தவர்கள் தாக்குதல் மேற்கொண்டதுடன் தங்கச் சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த மாணவன் உட்பட இருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி ஏ- 35 வீதியின் முரசுமோட்டை பகுதியில் பொங்கல் பொருட்கள் வாங்கச்சென்ற பாடசாலை மாணவனும் அவரது சகோதரரும் கடைக்குச் சென்று திரும்பிய சமயம் மதுபோதையில் இருந்தவர்களால் குறித்த மாணவன் மீதும் அவரது சகோதரன் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை குறித்த சம்பவத்தின் போது அவர்களில் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி ஒன்றையும் அறுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை தனது பிள்ளைகள் தாக்கப்பட்டது தொடர்பாக கேட்பதற்குச் சென்ற அவர்களது தாய் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. குறித்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த பாடசாலை மாணவன் உட்பட 2 பேர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

15.04.2021
சித்திரை 02, வியாழக்கிழமை
திருதியை பிற்பகல் 2.26 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 7.23 மணிவரை
சுபநேரம் 7.34- 9.04 மணிவரை
இராகுகாலம் 1.34- 3.04 மணிவரை
சந்திராஷ்டமம்:-சித்திரை, சுவாதி
கார்த்திகை விரதம், சக்தி கணபதி விரதம்

வளவன்


மேஷம்

காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


ரிஷபம்

பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.


மிதுனம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், சுவாரஸ்யங்கள் கூடும் நாள்.


கடகம்

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


சிம்மம்

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சந்தோசம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, அந்நியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


கன்னி

மறைமுக எதிர்ப்புகள் மாறும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.


துலாம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையக்கூடிய வாய்ப்புண்டு, சில கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, திடீர் பயணம் சிந்திக்க வைக்கும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


தனுசு

கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.


மகரம்

ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீதான பாசம் கூடும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.


மீனம்

பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு, கௌரவமான நாள்.

போலியே முகத்துதியின் மெய்யான உருவம்

# சீன ஜனாதிபதி- கோட்டா தொலைபேசியில் உரையாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், சீன ஜனாதிபதி ஜி ஜிங்பிங்கிற்கும் இடையே தொலைபேசி கலந்துரையாடல் மீண்டும் இடம்பெற்றுள்ளது.

இந்த தொலைபேசி கலந்துரையாடல் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளதுடன், அதன்போது சீன ஜனாதிபதி தனது புதுவருட வாழ்த்துதலையும் தெரிவித்திருப்பதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் இரு நாடுகளுக்குமிடையேயான உபாயமார்க்க பொருளாதார திட்டம், இலங்கையிலுள்ள சீன வேலைத் திட்டங்கள், வர்த்தக செயற்பாடுகள் என பல விவகாரம் பற்றியும் இதில் பேசப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மலர்ந்திருக்கும் புது வருடத்தில் சீனா- இலங்கையின் உறவு மென்மேலும் பலம் பெற வேண்டும் என்ற புதுவருட வாழ்த்துக்களை அந்நாட்டு ஜனாதிபதி ஜின்பின், இலங்கை ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் இயலாமையை மறைக்க அரசு முயற்சி

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இரு வருடங்களாகின்றன. ஆனால் அரசாங்கம் போலிக் காரணங்களை கூறி உண்மையான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குறிப்பிட்டுள்ளது.

பிரதான சூத்திரதாரியாக நௌபர் மௌலவியை அறிவிப்பதன் பின்னணியின் ஊடாக அரசாங்கத்தின் இயலாமையை மறைத்துக் கொள்ள முற்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் களை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்காத நௌபர் மௌலவி சஹ்ரானுடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் அவரிடமிருந்து விலகியவராவார்.

தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர் எமது அரசாங்கத்தில் இவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட போது இந்த தகவல்கள் வெளியாகின.

ஆனால் தற்போதைய அரசாங்கம் இவரையே பிரதான சூத்திரதாரியாக அறிவித்துள்ளது. அவ்வாறெனில் ஏன் இவர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்படவில்லை? இதில் யாருடைய அழுத்தம் தாக்கம் செலுத்துகிறது? நௌபர் மௌலவியை கைது செய்வதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் தொடர்பில் அரசாங்கம் நிச்சயம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# தமிழர்களுக்கு வாழ்த்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி பிடன்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தமிழ், கேரளா, பெங்காலி, நேபாளி உள்ளிட்ட பல்வேறு தரப்பு மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், வைஷாகி, நவராத்திரி, சாங்ரன் மற்றும் வரும் வாரத்தில் புத்தாண்டு கொண்டாடும் தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசிய சமூக மக்களுக்கு நானும் ஜில்லும் (பிடனின் மனைவி) வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனிய பெங்காலி, கம்போடியன், லியோ, மியன்மாரிஸ், நேபாளி, சின்ஹலிசி, தமிழ், தாய் (தாய்லாந்து), விஷு புத்தாண்டு வாழ்த்துகள் என பதிவிட்டுள்ளார்.(நி-4)

# எட்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து- பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் 8 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக வீதியில் தொடங்கொட நுழைவாயிலுக்கு அருகிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்காரணமாக தெற்கு அதிவேக வீதியின் தொடங்கொட மற்றும் களனிகம பகுதிகளுக்கு இடையில் கடும் போக்குவரத்து நெரிசல் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், வாகனங்களின் வேகத்தை குறைத்து வாகனங்களுக்கு இடையிலான இடைவெளியைக் கடைப்பிடித்து பயணிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# இணையத்தளம் ஊடான விற்பனை தொடர்பில் அவதானம் தேவை

(கொழும்பு)

இணையத்தளம் ஊடாக பொருட்கள் கொள்வனவு செய்யும் போது அவதான மாக செயற்படுமாறு பொது மக்களுக்கு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இணையத்தளம் ஊடாக விற்பனை செய்யப்படும் பொருட்கள் திருடப்பட்டுள்ளதென பொலிஸ் விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அக்பர் போட்ட புதிர்

"என்னுடைய உறவினர் ஒருவர் இறந்துவிட்டார். அவரைச் சுடுகாட்டில் தகனம் செய்வதற்காகப் போயிருந்தேன். உயிர் போன பிறகு இந்த உடம்பு மண்ணோடுதானே சேர்ந்து விடுகிறது! அதைத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறாள்" என்றார்.

"உங்கள் மனைவி ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாக ஆக்கச் சென்றிருக்கிறாள் என்றாளே" என்றார் பீர்பால்.

"பக்கத்து வீட்டில் உழுந்து உடைத்துக் கொடுக்கச் சொன்னார்கள். அங்கு சென்று உழுந்து உடைத்துக் கொடுத்துவிட்டு வருகிறாள்" என்றார் அந்தச் சிறுமியின் தகப்பனார்.

இந்தப்பதில்களைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த பீர்பால் "அக்பர் சக்கரவர்த்தி போட்ட புதிருக்குப் பதில் அளிக்கக் கூடியவர்கள் இவர்களே' என்று கருதினார்.

அக்பர் சக்கரவர்த்தி கூறியதை நினைவுபடுத்திக் கொண்டு "மேலே மூடி, கீழே மூடி, நடுவே மெழுகுதிரி எரிந்து அணைகிறது. இது என்ன?என்று கேட்டார் பீர்பால்.

இதைக் கேட்ட அந்தச் சிறுமியின் தந்தை, " இரண்டு மூடிகள்என்றால்ஒன்று ஆகாயம், மற்றொன்று பூமி. மெழுகுதிரி என்பது மனிதன். பூமியில் மனிதன் வாழ்ந்து இறந்து விடுகிறான். இதுதான், இந்தப் புதிருக்கு விடை" என்று கூறினான்.



இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த பீர்பால் தம்மால் இயன்ற பொருட்களைச் சன்மானமாக அந்தக் குடும்பத்திற்குக் கொடுத்தார்.

மறுநாள் அரச சபைக்குச் சென்ற பீர்பால், அக்பர் சக்கரவர்த்தி போட்ட புதிருக்கான விடையைக் கூறினார்.

அதைக் கேட்ட சபையிலிருந்தவர்கள் அனைவரும் ஆச்சிரியப்பட்டனர்.

பீர்பாலின் அறிவுத் திறனைப் பாராட்டி அக்பர் சக்கரவர்த்தி, பொன்னையும் மணியையும் பரிசாக வழங்கினார். பீர்பால் தாம் அதைப் பெற்றுக் கொள்ளாமல், தமக்கு அந்தப் புதிருக்கு உரிய விளக்கத்தைக் கூறிய குடும்பத்தவரை வரவழைத்தார்.

"இவர்களே அந்தப் பரிசுக்கு உரியவர்கள்" என்று கூறி, நடந்த நிகழ்ச்சிகளை விளக்கமாகக் கூறினார்.

அக்பர் சக்கரவர்த்தி வழங்கிய பரிசை அந்தக் குடும்பத்தவர் பெற வழி செய்தார். பீர்பாலின் நேர்மையை வியந்து பாராட்டிய அக்பர் சக்கரவர்த்தி பீர்பாலுக்குச் சிறப்புப் பரிசு வழங்கினார்.

(முற்றும்)

# மகாபாரதம்




வெற்றி வீரனான மகனை இந்திரன் ஆரத் தழுவினான். யாராலும் பிளக்க முடியா கவசத்தையும், மணிமகுடத்தையும், தேவதத்தம் எனும் சங்கையும் பரிசாக அளித்தான்.

இந்நிலையில் காட்டில் மற்ற சகோதரர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்.

**பீமன்- அனுமன் சந்திப்பு**

தருமர் தன் மூத்த சகோதரர்களுடன் நான்கு திசைகளிலும் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார். "கடத்தற்கரிய வழியில்அனைவரையும் நான் தூக்கிச் செல்வேன்" என்றான் பீமன்.

ஆனாலும் நடைப் பயணத்திலேயே கந்தமாதனமலை மேல்அவர்கள் சென்றபோது இடியும், மின்னலும், மழையும்படாதபாடுபடுத்தின.

திரௌபதி மயங்கி விழுந்தாள். அப்போது கடோத்கஜன் தோன்றி திரௌபதியை தூக்கிச் சென்றான். கடோத்கஜனுடன் வந்த மற்ற அசுரர்கள் தருமர், [illegible] சகாதேவனை [illegible] உரிய இடத்தில் சேர்த்தனர்.

அனைவரும் கயிலை மலை சென்று கடவுளை வணங்கினர். பத்ரிகாச்ரமத்தை அடைந்து சித்தர்களை சந்தி[illegible] திரௌபதி அங்கு காணப்பட்ட ஆயிரம் இதழ்களுடன் கூடிய மணம் மிக்க "சௌகந்திகம்" என்ற மலரின் எழிலில் மனத்தை பறிகொடுத்தாள்.

அது போன்ற மலர்கள் வேண்டும் என பீமனிடம் வேண்டினாள். அம்மலர்கள் குபேரன் நாட்டில் மட்டுமே உள்ளது என அறிந்து பீமன் குபேரபுரி நோக்கி நடந்தான்.

பீமன் செல்லும் வழியில் குரங்குஒன்று பெரிய உருவத்துடன் வாழை மரங்களிடையே படுத்திருப்பதைக் கண்டான். அதை எழுப்ப பேரொலி செய்தான்.

கண் விழித்த குரங்கு "இங்கு தேவர்களும் வர அஞ்சுவர். இதற்குமேல் உன் பயணத்தைத் தொடராது திரும்பிப் போ" என்றது.

இது கேட்ட பீமன் "என்னையா திரும்பிப் போகச் சொல்கிறாய். நான் பாண்டுவின் மைந்தன். உன் வாலை மடக்கி எனக்கு வழி விடு" எனக் கூச்சலிட்டான்.

உடன் குரங்கு "உன் ஆணவப் பேச்சை நிறுத்து. உனக்கு வலிமை இருந்தால் என்னைத் தாண்டிச் செல்" எனக் கூற "முதியோரை அவமானப்படுத்த நான் விரும்பவில்லை" என்றான் பீமன்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா... இப்போதைக்கு ஓயாது உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை!

(ஜெனிவா)

**கொரோனா வைரஸ் தொற்று இன்னும் அதிவேகமாக வளர்ந்து வருகிறது என்றும் அது முடிவுக்குவர நீண்ட காலம் ஆகலாம் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**




உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பு 1 1/2 ஆண்டுக்கு மேல் நீடித்து வருகிறது. தற்போது பல் வேறு நாடுகளில் வைரஸ் வேகமாக பரவி வருகிறது.

இதனால் மீண்டும் கடும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அமெரிக்கா, இந்தியா, பிரேசில், மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தினசரி பாதிப்பு அதிகரித்தபடியே இருக்கிறது.

கடந்த 2019ஆம் ஆண்டு இறுதியில் சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவியது.

பின்னர் சுமார் 5 மாதங்களுக்கு பிறகு பாதிப்பு குறைய தொடங்கியது. மேலும் தடுப்பு மருந்துகளும் பயன்பாட்டுக்கு வந்தன. இதனால் கொரோனா விரைவில் கட்டுக்குள் வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மீண்டும் வைரசின் தாக்கம் வேகமெடுத்துள்ளது.

இந்தநிலையில் கொரோனா வைரஸ் தொற்று இன்னும் அதிவேகமாக வளர்ந்து வருகிறது என்றும் அது முடிவுக்குவர நீண்ட காலம் ஆகலாம் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-4)

## பிரேசிலுடனான விமானங்களுக்கு தடை விதித்தது பிரான்ஸ்

(பாரிஸ்)

கொரோனா வைரஸ் புதிய பிறழ்வு பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் பிரேசிலில் இருந்து வரும் அனைத்து விமானங்களுக்கும் பிரான்ஸ் தடை விதித்துள்ளது.

புதிய வகை ஆபத்தான கொரோனா வைரஸ் பிறழ்வுகள் மேலும் தீவிரமாவதைத் தடுக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று நோய் மிக வேகமாக அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக பிரான்ஸ் உடனடியாக எல்லைகளை மூட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் மற்றைய நாடுகளில் பிரான்ஸை விட அதிக பிறழ்வு கொரோனா வைரஸ் பரவி உள்ள நிலையில், பிரான்ஸ் உடனடியாக தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்தே பிரேசிலில் இருந்து வரும் அனைத்து விமானங்களுக்கும் பிரான்ஸ் தடை விதித்துள்ளது. (நி-4)

## மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தை இராணுவம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குகிறது

### மியன்மாரின் நிலை குறித்து ஐ.நா.கவலை

(நேபிடாவ்)

மியன்மாரில் கடந்த பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்த்து விட்டு இராணுவம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. அப்போது முதல் அந்த நாட்டு மக்கள் இராணுவ ஆட்சிக்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மக்களின் இந்த தன்னெழுச்சி போராட்டத்தை இராணுவம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி வருகிறது.

இராணுவ ஆட்சி தொடங்கியதில் இருந்து இப்போது வரை 600இற்கும் அதிகமான போராட்டக்காரர்கள் இராணுவ வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் மியன்மாரில் தொடர்ந்து அசாதாரண சூழ்நிலை நீடிக்கிறது.



இந்த நிலையில் மியன்மாரின் தற்போதைய நிலைமை 2011 ஆம் ஆண்டு சிரியாவில் உள்நாட்டு போர் தொடங்கியதை எதிரொலிப்பதாக சர்வதேச மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதர் மிச்சேல் பச்லெட் கவலை தெரிவித்துள்ளார்.

சிரியாவில் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் வன்முறையால் அடக்கப்பட்டதால் அங்கு உள்நாட்டு போர் வெடித்ததை சுட்டிக்காட்டி மிச்சேல் பச்லெட் இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,


"சிரியாவில் 2011 ஆம் ஆண்டு அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மீது மிருகத்தனமான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டது சில தனிநபர்கள் ஆயுதங்களை எடுக்க வழி வகுத்தது. பின்னர் அது நாடு முழுவதும் விரிவடைந்து உள்நாட்டு போராக மாறியது. அப்போது சர்வதேச சமூகம் முறையான பதிலை வழங்காதது சிரியாவுக்கு பேரழிவை ஏற்படுத்தியது.

தற்போது மியன்மாரின் நிலைமை ஒரு முழுமையான மோதலை நோக்கி நகர்கிறது. சிரியா மற்றும் பிற இடங்களில் கடந்த காலங்களில் நடந்த கொடிய தவறுகளை செய்ய சர்வதேச சமூகம் மீண்டும் அனுமதிக்கக்கூடாது" என தெரிவித்தார். (நி-4)

## அபுதாபியில் அபூர்வமாக தென்பட்ட ஆள்காட்டி பறவைகள்

(அபுதாபி)

அபுதாபியில் மிக அபூர்வமான ஆள்காட்டி பறவைகள் தென்பட்டுள்ளன. இந்த பறவைகள் நடமாடும் காட்சிகள் அபுதாபி- டுபாய் எல்லைப்பகுதியில் உள்ள விவசாய பண்ணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



கறுப்பு நிறத்தில் மூக்குடைய கரையோரம் வாழும் பறவையினம் 'லேப்விங்ஸ்' எனப்படும் ஆள்காட்டி பறவையாகும்.

மனிதர்களையோ அல்லது மற்ற எதிரி விலங்கினங்களையோ கண்டால் ஒலி எழுப்பி மற்ற பறவைகளுக்கும் தெரியப்படுத்தும். இதன் காரணமாக இந்த பறவை ஆள் காட்டி குருவி என்று அழைக்கப்படுகிறது. இப்பறவை தரையில் முட்டை யிட்டு குஞ்சு பொரிக்கும் என்பது விந்தையான தகவலாகும்.

அமீரகத்தை பொறுத்த வரையில் மிக அரிதாக காணப்படும் பறவையாகும். (நி-4)

## உம்ரா யாத்திரை செல்வோர் அனுமதி பெற வேண்டும்

### இல்லையேல் 10 ஆயிரம் றியால் அபராதம்

(கொழும்பு)

அனுமதி இல்லாமல் உம்ரா யாத்திரை செல்வோருக்கு 10 ஆயிரம் றியால் அபராதம் (சுமார் 5 இலட்சம் இலங்கை ரூபா) விதிக்கப்படும் என சவுதி அரேபிய அரசு எச்சரித்துள்ளது.

ரம்ழான் மாதத்தில் உம்ரா அல்லது வேறு ஏதேனும் யாத்திரைக்கு வருவோர் உரிய அனுமதி இல்லாமல் யாத்திரை மேற்கொள்ள முயற்சித்தால் அபராதம் விதிக்கப்படும் என சவுதி அரேபிய அரசு எச்சரித்துள்ளது.

பெமிற் இல்லாமல் மக்கா மஸ்ஜிதுல் ஹரத்திற்கு செல்ல முயற்சிக்கும் நபர்களுக்கு தலா 10 ஆயிரம் றியால் அபராதம் விதிக் கப்படும் என சவுதி அரேபிய அரசு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில், மக்கா மசூதியில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விதி மீறலில் ஈடுபடும் யாத்ரிகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சவுதி அரேபிய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது. மக்கா பள்ளி வாசலுக்கு தினசரி 50 ஆயிரம் உம்ரா யாத்ரிகர்கள் வரை அனுமதிக்கப்படுவர்.

ரம்ழான் நாளில் ஒரு இலட்சம் பேர் அனுமதிக்கப்படுவர். கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் மட்டுமே உம்ரா யாத்திரை மேற்கொள்ளவும், மக்கா மசூதிக்கு வரவும் அனுமதிக்கப்படுவார்கள் என சவுதி அரசு தெரிவித்துள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி தொடர்பில் வெளிப்படை தன்மை இல்லை-வெளிவந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கப் படும் திகதி இடம் மற்றும் யார் அதற்கு தகுதிபெற்றவர்கள் குறித்த விபரங்கள் சிறிதளவே வெளியாகின்றன என தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் யாமினி மிஸ்ரா இது தடுப் பூசியை பெற முயலும் மக்களுக்கு தடையாகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.**

இலங்கை, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கும் திட்டங்கள் குறித்த எந்த தகவலும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் தடுப்பூசிக்கான பெரும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக தேசிய அளவில் தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி-4)

# மொட்டுக் கட்சியில் கடும் அதிருப்தி மாற்றப்படுகிறது அமைச்சரவை?

(கொழும்பு)

மொட்டுக்கட்சியில் அதிகரித்துவரும் அதிருப்தி நிலையை சமாளிக்கும் வகையில் மூன்று சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேறி பொது ஜன பெரமுனவுடன் இணைந்துள்ள மூன்று சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எவ்வித அமைச்சுப் பதவியும் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில்அந்த மூன்று சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவராக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க மீண்டும் சுதந்திரக்கட்சியில் இணையவுள்ளதாக தகவல் வெளியாகிய நிலையிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி. திஸாநாயக்க, அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் எலான் பெரேரா ஆகியோருக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர்





(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பிலவ வருடப்பிறப்பு வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அந்த வகையில், வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் பல பகுதிகளிலும் தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பு கொண்டாடப்பட்டது.

ஜனாதிபதியும் பிரதமரும் அவர்களது மனைவி மற்றும் பிள்ளைகள், மருமக்கள் உள்ளிட்ட உறவினர்களுடன் புதுவருடப் பிறப்பை வரவேற்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.(நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2284

**காந்தன்**


மனதில் எந்த ஒரு எண்ணோட்டமும் இல்லாமல்...




திட்டாமல் நடிக்காமல் நாம் Attend செய்யும் ஒரு Call...

**விஜயா**

தராசிற்கு!! நியாயமெல்லாம் தெரியாது எந்த பக்கம் கனமிருக்கிறதோ அந்த பக்கம் சாய்ந்து விடும்!!!



அப்படித்தான் சில மனிதர்களும்?

**செந்தாழன்**

பாஸ்போர்ட்டை தொலைத்த மனைவி... தனியாக ஹனிமூன் சென்ற கணவர்...!



இதுக்கு பேரு ஹனிமூன் இல்ல... "தனி" மூன்

**கண்மணி**

புதுவருடப்பிறப்பிற்கு அடுத்த நாள்




நேத்து சாப்பிட்ட பலகாரம் வயிறு வலிக்குதுமா... ஏய் நடிக்காத ஸ்கூலுக்கு டைம் ஆச்சு கிளம்பு

**சௌந்தர்யா**



எண்ணங்களை பொறுத்தே உங்களின் மகிழ்ச்சியின் அளவு

**கரன்**

வாழ்க்கைல விழுந்து எழுந்திருக்கிறத விட...



காலைல ஆறு மணிக்கு தூக்கத்தில் இருந்து எழுந்திருக்கிறது தான் ரொம்ப கஷ்டமா இருக்கு...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லர் பாணியிலான ஆட்சியென்றால் மக்கள் விரைவில் பதிலளிப்பார்கள்

## தேரர் விடுத்துள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

ஹிட்லர் பாணியிலான ஆட்சியை நாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று யாராவது சொன்னால், மக்கள் விரைவில் அவர்களுக்கு பதிலளிப்பார்கள் என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.




அண்மையில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டித்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கோட்டாபய ஒரு ஹிட்லராக இருக்கப் போகிறார் என்று நான் நினைக்கவில்லை. 77 ஆம் ஆண்டு காலத்தில் ஹிட்லர்களுக்கு எதிராக போராடிய ராஜபக்ஷக்கள் ஹிட்லரின் ஆட்சியை செய்ய மாட்டார்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் தனது பெயரை போட்டுக் கொள்ள அல்லது நாட்டை அழிக்க இவ்வாறு கூறியுள்ளார் எனவும் தேரர் தெரிவித்துள்ளார்.

எனவே எவரும் 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன என்று பெருமை கொள்ள முடியாது. அதேநேரத்தில் 69 இலட்சம் வாக்குகள் பெற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நம்பகத்தன்மையே காரணம் என்று அச்சமின்றி கூறலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் இருந்து வாக்குகளின் எண்ணிக்கை ஐந்து இலட்சம் அதிகரித்துள்ளது. ஆனால் இன்று அந்த ஐந்து இலட்சம் முற்றிலுமாக இழந்துள்ளது.

ஹிட்லரைப் போன்ற ஒரு ஆட்சிக்கு எங்கள் மக்கள் விரைவில் பதிலளிப்பார்கள் என்று அவர் தெரிவித்தார்.(நி-4)



தமிழ் - சிங்கள சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு கிழக்கிலங்கையின் வரலாற்றுச்சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. நேற்று முன்தினம் இரவு சுபவேளையில் மாமாங்கேஸ்வரருக்கு மருத்துநீர் வைக்கப்பட்டு விசேட அபிஷேகம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாமாங்கேஸ்வரருக்கு விசேட பூஜைகள் நடைபெற்றன.

# புத்தாண்டு பிறக்கும் போதே இடம்பெற்ற படுகொலைகள்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் 3 கொலை சம்பவங்கள் பதிவாகி உள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இக்கொலைகள் இடம்பெற்றன. திஸ்ஸமஹாராம சந்தகிரிகம பிரதேசத்தில் 48 வயதுடைய பெண் ஒருவர் தனது காதலனின் தாக்குதலால் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை ஹிதோகம, ஹீனாபோவாகம பிரதேசத்தில் 45 வயதுடைய நபர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் தொடர்பில் இருந்த பெண்ணின் கணவரே அவரை வெட்டிக் கொலை செய்துள்ளார்.

அத்துடன் பொத்துஹெர ரத்கல்ல பிரதேசத்தில் 64 வயதுடைய தனது தந்தையின் கழுத்தை நெரித்து 45 வயதுடைய மகன் கொலை செய்துள்ளார்.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

# கொழும்பில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்று

(கொழும்பு)

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 226 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ள நிலையில் அதில் அதிகளவான நோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

### தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எது சுலபம்?

ஒரு வயதான குரு சாய்வு நாற்காலியிலே உட்கார்ந்திருந்தார். ஒரு ஆள் அவரைத் தேடி வந்தார். வந்து அவர் முன்னால் நின்றார். "ஐயா நான் உங்களுக்கு சீடனாக ஆகிடலாம் என்று நினைக்கிறேன்!" என்றான்.

அந்த குரு நிமிர்ந்து பார்த்தார்.

"இதோ பாரப்பா... அது அவ்வளவு சுலபமான வேலையில்லையே!" என்றார்.

"அப்படியா சொல்கிறீர்கள்?" என்றான்.

"ஆமாம்! நீ ஒரு சீடனாக ஆக வேண்டும் என்றால் உன்னுடைய அகங்காரத்தை விட்டுவிட வேண்டும். தியானத்திலே முழுமையாக ஈடுபட வேண்டும். அது மாதிரி இன்னும் பல காரியங்களை ஒழுங்காக செய்ய வேண்டும். ஒரு ஈடுபாட்டோடு செய்ய வேண்டும். அது மட்டுமில்லாது இதையெல்லாம் தொடர்ந்து நீண்ட நாட்களுக்குச் செய்ய வேண்டியிருக்கும். அது உன்னால் முடியுமா?" என்றார்.

வந்தவன் யோசிக்க ஆரம்பித்தான். சீடனாக ஆவதிலேயும் இவ்வளவு சிரமம் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியாது. யோசித்துக்கொண்டே குருவைப் பார்த்தான். அவரும் சாய்வு நாற்காலியிலே இருந்த நிலைமையைப் பார்த்தான்.

சரீங்க சுவாமி... சீடனாக ஆவது இவ்வளவு கஷ்டம் என்றால் அது வேண்டாம்.. அதற்குப் பதிலாக உங்களை மாதிரி ஒரு குருவாக ஆகிவிடுகிறேனே! என்றான். குரு சிரித்தார். நீ சொல்வது சரிதான். குருவாக ஆகிவிடுவது சுலபமான வேலைதான் என்றார்.

இதைக் கேட்டதும் அந்த ஆளுக்கு ஏகப்பட்ட சந்தோசம்... கஷ்டப்படாமலே குருவாகிவிடலாம் போல இருக்கே என்று கணக்குப் போட்டான்.

பின்பு அந்த குரு சொன்னார்... நீ குருவாக ஆகிவிட்டால் பல சீடர்களுக்கு தலைவனாக ஆக வேணடும்... அவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும். அது கஷ்டமாச்சே! ஏனென்றால் பல பேர் கோபப்படுபவர்களாக இருப்பார்கள்.

சில சமயம் சண்டைகூட போடுவார்கள். சொல்வதைக் கேட்க மாட்டார்கள்... பணிவு இருக்காது. இப்படிப்பட்டவர்களையெல்லாம் சமாளிக்கிறது ரொம்ப ஆபத்தான விடயமாச்சே! என்றார்.

என்ன சுவாமி...இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்புதானே சொன்னீர்கள்... குருவாக ஆவது சுலபம் என்று!

ஆமாம் அது சரிதான்... இப்போ என்னையே பாரேன்... நான் எவ்வளவு ஓய்வாக இருக்கிறேன். ஆனால் ஒன்று ... ஒருத்தன் பல சீடர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும். அல்லது ஒரு சீடனாக ஆகிவிட வேண்டும் என்றார்.

அவன் இப்போ கொஞ்சம் குழம்பிப் போய்விட்டான். சுவாமி நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இரண்டுமே கஷ்டமான காரியமாகத்தான் தோன்றுகிறது. என்ன முடிவு எடுப்பது என்றே எனக்குப் புரியவில்லை. அதனாலே உங்களுடைய அபிப்பிராயம் என்ன? அதைச் சொல்லுங்கள்! என்று கேட்டான்.

இப்போது அந்த குரு சொன்னார் ... நீ பல சீடர்களின் தொல்லைகளுக்கு ஆளாவதைவிட நீயே முதலில் சீடனாகி தொல்லைப் படுவது தான் சரியாக இருக்கும்.

ஏனென்றார்... அப்போது நீ உன்னுடைய பிரச்சினையை மட்டும் தான் கனிக்க வேண்டியிருக்கும். குருவாக ஆகிவிட்டால் பல பேர்களின பிரச்சினையிலே தலையிட வேண்டியிருக்கும்! என்றார்.

ஒரு உண்மையான குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவு மிகவும் பயன் கருதாத ஒரு அன்புக்கலப்பு (ஓஷோ). இரண்டு இயற்கையான முழுமை நெருங்கி வந்து ஒன்றுடன் ஒன்று கலப்பது அது.

நீங்கள் கேள்வி கேட்டால் எப்படி "முழுமை" இருக்க முடியும்? உங்கள் மனம் பதிலுக்காக காத்திருக்கும்போது அது எப்படி வெறுமையாக இருக்கும்?

முழுமை என்பது ஓர் அமைதியான நிலை. இந்தக் காலத்து குரு–சீடர்கள் எல்லாம் வேறு மாதிரி.

ஒரு குரு தன் சீடனிடம் சொன்னார்... இதோ பாரப்பா... நீ இந்த உலகத்திலே எதற்கும் பிரயோசனப்பட மாட்டாய்! பன்றி மேய்ப்பதற்கு கூட லாயக்கில்லை என்றார். அப்போது ஒன்று செய்கிறேன் என்றான் சீடன்.

என்ன? என்று கேட்டார்.

உங்களை மாதிரி ஒரு குருவாக ஆகிவிடுகிறேன்! என்றான் அந்த சீடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 14 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**1981 ஜூன் 1 திங்கட்கிழமை பகல் - அன்று முழுவதும் யாழ்ப்பாணத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. பாராளு மன்ற உறுப்பினர்கள் கா.பொ. இரத்தினம், மு.சிவசிதம்பரம் ஆகியோர் காலையில் அழிவு களை வந்து பார்வையிட்டனர். அமைச்சர்கள் காமினி திசாநா யக்கா, பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் உட்படப் பல அதிகா ரிகள் யாழ்.நகர் வந்தனர்.**

அன்றிரவு (1981 ஜூன் 1) 10 மணியளவில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தினுள் நுழைந்த தென் னிலங்கை வன்முறைக் கும்பல் ஒன்று அங்கிருந்த காவலாளியைத் துரத்திவிட்டு நூலகத்தை சேதப் படுத்தி கட்டடத்திற்குத் தீயிட்ட னர்.

யாழ்.பொலிஸ் நிலையம் நூல கத்திற்கு 700 யார் தொலைவில் அமைந்திருந்தது. நூலகத்தில் இருந்த அனைத்து நூல்கள், கையெ ழுத்துப் பிரதிகள், பத்திரிகைகள் அனைத்தும் தீக்கிரையாகின. தளபாடங்கள் எரிக்கப்பட்டன.

நூலகம் எரிவதாக அன்றிரவு 10.15 மணிக்கு தகவல் அறிந்த அன்றைய மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் மாநகர தீய ணைப்பு ஊழியர்களுக்குத் தகவல் தெரிவித்தார். தீயை அணைக்கச் சென்றவர்களை துரையப்பா விளை யாட்டரங்கில் தங்கியிருந்த பொலிஸார் தடுத்துத் திருப்பி அனுப்பினர்.

**1981 ஜூன் 1 திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு 700 யார் தொலைவில் அமைந்திரு ந்த யாழ்ப்பாணப் பொது நூல கத்திற்குள் நுழைந்த வன்மு றைக் கும்பல், நூலகத்தை சேதப்படுத்தி, கட்டடத்திற்குத் தீயிட்டனர். தீயை அணைக்கச் சென்றவர்களை துரையப்பா விளையாட்டரங்கில் தங்கியி ருந்த பொலிஸார் தடுத்துத் திருப்பி அனுப்பினர். சிந் தைக்கு விருந்தளித்த அறிவுக் களஞ்சியம் எரிந்து சாம்பலா யிற்று.**

**செவ்வாய் ஜூன் 2, 1981**

ஜூன் 2 இல், இலங்கை அரசு அவசரகால நிலையை அறிவித்து, யாழ்.நகரில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. மாவட்ட சபைத் தேர்தல்கள் திட்டமிட்டபடி ஜூன் 4 இல் அவசரகால நிலைமையின் கீழ் இடம்பெற்றது. ஜூன் 10 அன்று அவ சரகால நிலை விலக்கிக் கொள்ளப் பட்டது.

சீருடைகளில் வந்தோரால் இந் தத் தாக்குதல்கள் நிகழ்ந்த வேளை யில், இரண்டு அமைச்சர்கள், மாவ ட்ட அமைச்சர், அரச உயர் அதிகாரி கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த தாக நான்சி மறே என்ற ஊடகவிய லாளர் தெரிவித்துள்ளார். 20 ஆண்டு களுக்குப் பின்னர், அரசுக்குச் சொந் தமான "டெய்லி நியூஸ்" பத்திரிகை 1981 நிகழ்வை "அன்றைய அரசி னால் விடுவிக்கப்பட்ட குண்டர்க ளால்" இவை நடத்தப்பட்டதாக தனது ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்தது. (இணையத்திலிருந்து)

**1981 ஜூன் 2 இல் இலங்கை அரசு அவசரகால நிலையை அறிவித்து யாழ்.நகரில் ஊரட ங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட் டது. மாவட்ட சபைத் தேர்தல் கள் திட்டமிட்டபடி ஜூன் 4 இல் அவசரகால நிலைமையின் கீழ் இடம்பெற்றது. ஜூன் 10 அன்று அவசரகால நிலை விலக்கிக் கொள்ளப்பட்டது.**

"மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின் றது" நூலிலிருந்து...

நீலவண்ணன் எழுதி வரதர் வெளியீடாக 1981 ஜூலையில் பிரசுர மான "மீண்டும் யாழ்ப்பாணம் எரிகி ன்றது" என்ற சிறுநூல் யாழ்.நூல கப்படுகொலை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

ஐயகோ, நூலகம் எரிக்கப்பட் டதே!

'பொலிஸ்மா அதிபரும் பிரிகேடி யர் வீரதுங்காவும் யாழ்ப்பாணத்தில் இருக்கத்தக்கதாக, ஜூன் 1 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் கொடூரமானவையும் வியப்பானவையுமாகும். அதே பொலி ஸார் அன்று இரவு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்குத் தீயிட்டனர். ஏறத்தாழ 97,000 பெறுமதி மிக்க நூல்கள் எரிந்து கருகிப்போயின. உலகில் எங்கிருந்தும் இனிமேல் பெறுவதற்கரிய நூல்கள் பல எரிந்து போயின. அந்த நூல் நிலையம் நீண்டகாலமாகக் கட்டி எழுப்பப் பட்டது. அதனை எரித்து முடித்தனர். இந்த நாட்டில் வாழ்கின்ற ஒரு சில மக்களின் மன நிலையை புரிவத ற்கு இந்தச் சம்பவம் தக்க [illegible] ஆகும். இரண்டாம் உலக மகா யுத் தத்தின் போது பிரித்தானியாவின் மீது குண்டுகளை வீசிச் சென்ற விமானப் படை விமானிகளுக்கு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திற்குக் குண்டுகளை வீசி அழித்துவிடக் கூடாது என ஹிட்லர் உத்தரவிட் டான். அதே போல ஜேர்மனியின் ஹைடல்பேர்க் பல்கலைக்கழகத் தைத் தவிர்க்கும் படி பிரித்தானியா தனது விமானப் படைக்குப் பணிப் புரை வழங்கியது. அறிவுத் தளங் களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் பகைவர்களுக்குக் கூட இருந்தது. ஆனால் யாழ்ப்பாணத் தில் கண்மூடித்தனமாக நடந்து கொண்ட பொலிஸார் அங்கிருந்த நூல் நிலையத்தைக் கூட விட்டு வைக்கவில்லையே! என எதிர்க் கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் கவலையுடன் தெரிவித்தார்.

**"பொலிஸ்மா அதிபரும் பிரி கேடியர் வீரதுங்காவும் யாழ்ப் பாணத்தில் இருக்கத்தக்கதாக ஜூன் 1 ஆம் திகதி இரவு யாழ்ப் பாணத்தில் நிகழ்ந்த சம்பவங் கள் கொடூரமானவையும் வியப் பானவையுமாகும். ஏறத்தாழ 97,000 பெறுமதிமிக்க நூல் கள் எரிந்து கருகிப்போயின.**

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலை யத்திற்கு எதிரே 700 யார் தூரத்தில் யாழ்.பொதுசன நூலகம் அமைந் துள்ளது. யாழ்ப்பாண மாவட்ட அபி விருத்தி சபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகத் தென்னில ங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந் திருந்த விசேட பொலிஸார் தங்கியி ருந்த துரையப்பா விளையாட்டு அரங் கும் யாழ்.நூலகத்துக்கு நேர் எதிரே தான் இருந்தது. இவ்வளவு பாது காப்பு இருந்தும் திங்கள் இரவு பொது சன நூலகம் தீ பிடித்து எரிந்தது.

அன்று இரவு 10 மணிபோல, நூலகத்துக்குள் நுழைந்தவர்கள், காவலாளியைத் துரத்திவி ட்டு நூலகக்கதவை கொத்தித் திற ந்து, உள்ளே நுழைந்து அட்டூழியங் கள் புரிந்தனர். 97 ஆயிரம் கிடை த்தற்கரிய நூல்களுக்குப் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தி அழித்தனர், நூல் இரவல் வழங்கும் பகுதி (lending section) முற்றாக எரிந்து சாம்பலாகி விட்டது. உருக்கு பீரோ வுக்குள் இருந்த நூல்கள் கூட, எரிந்து சாம்பலாகிப் போயின. உசாத்துணைப் பகுதியில் (Reference Section) இருந்த சேகரிக்க முடியாத அரிய நூல்கள் யாவும் தீயவர்களால் தீ வைத்துப் பொசுக்கப் பட்டது. சிறுவர் நூலகப் பிரிவிலுள்ள நூல்கள் யாவும் அழிவுற்றன். தளபாடங்கள் யாவும் ஒன்றாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. சுவர்கள் வெப்பத்தால் வெடித்து உதிர்ந்திருந்தன. யன்னல்கள் சிதறிப்போயின. நூலகத்துள்ளே சாம்பல் குவியல்களே எஞ்சிக்கிடந் தன. அந்தச் சாம்பல் குவியல்களுள் ஏதாவது நூல்கள் எரியாது எஞ்சிக் கிடக்குமோ என்ற நப்பாசையில் நூலக உதவியாளர்கள் சு.ம. இமனுவேலும் அ.டொன்பொஸ் கோவும் ச.கந்தையாவும் சாம்ப லைக் கிளறிக் கொண்டிருக்கின்ற நிலையைக் காண முடிந்தது.

**நூலகத்துள்ளே சாம்பல் குவியல்களே எஞ்சிக்கிடந்தன. அந்தச் சாம்பல் குவியல்களுக் குள் ஏதாவது நூல்கள் எரி யாது எஞ்சிக் கிடக்குமோ என்ற நப்பாசையில் நூலக உத வியாளர்கள் சு.ம. இமனுவே லும் அ.டொன் பொஸ்கோவும் ச.கந்தையாவும் சாம் பலைக் கிளறிக் கொண்டிருக்கின்ற நிலையைக் காணமுடிந்தது.**

நூலகம் கருகிக் காரைபெயர்ந்து கிடக்கின்றது. நூல் நிலையத்தின் விளம்பரப் பலகையில் நூலகம் அபிவிருத்தியின் அடித்தளம் "இல ங்கை நூலகச் சங்கம்" என்ற விள ம்பரம் எஞ்சி நிற்கிறது. உண்மை யில் அடித்தளம் மாத்திரமே எஞ் சிக்கிடக்கின்றது. புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது என்ற அறிவி த்தலும் நூலக வாசலில் இருக்கி றது. கயவர்கள் நூலகத்தையே புகைத்து விட்டார்கள்.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள மிகச் சிறந்த நூலகங்களில் ஒன்று எனக் கருதப்படுவது யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் ஆகும். 97 ஆயிரம் பல்துறை சார்ந்த நூல்கள் எரிந்து போயின. ஏறத்தாழ 19 ஆயிரம் அங்கத்தவர்கள் இந்த நூலகத்திலிருந்து நூல்களைப் பெற்று வாசித்துப் பயனடைவார் கள். மருத்துவம், இலக்கியம், ஜோதி டம் சம்பந்தமான ஓலைச் சுவடிகள் நூற்றுக்கணக்கானவை எரிந்து சாம்பலாகின. நூல் நிலையம் அழி ந்தது யாழ்ப்பாண மக்களுக்கு ஏற் பட்ட பேரிடியாகும். வணக்கத்துக் குரிய தாவிது அடிகள் மரணமாக நேர்ந்தது கவலைக்குரியதாகும். அவர் சுவாமி ஞானப்பிரகாசரின் மாண வர். ஒப்பியல் ஆய்வாளர் பொது நூல் நிலையம் எரிகிறது 'என்ற தகவல் கிடைத்ததும் அவர் அதிர்ச் சியடைந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை விமர்சிக்க எந்த அருகதையுமில்லை

## சவேந்திர சில்வா சீற்றம்



(கொழும்பு)

**என்னைத் திட்டமிட்டு பழிவாங்கும் வகையில் என்மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி 50 பக்க ஆவணத்தை சர்வதேச உண்மைகள் மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் தயாரித்துள்ளது.**

என்மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கும் எம்மை விமர்சிப்பதற்கும் ஜஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மைகள் மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்புக்கு எவ்வித அருகதையும் கிடையாது என ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி



## செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்

(தொடர்ச்சி)

சிலைகளைத் தொடுவதோ அல்லது சிலைகளின் திருவடிகளில் கற்பூரம் ஏற்றுவதோ கூடாது.

இறைவனுக்கு நைவேத்தியம் ஆகும் போது பார்க்கக்கூடாது.

விபூதி, சந்தனம், அபிஷேகம் தவிர சுவாமிக்கு இதர திருமஞ்சனம் ஆகும் போது பார்க்கக்கூடாது.

கோவிலின் உள்ளேயோ மதில் சுவர்களிலோ எச்சில் துப்புதல் கூடாது.

கோவிலின் உள்ளே சண்டை போடுதல், தலை வாரி முடித்தல், சூதாடுதல், சிரித்தல், காலை நீட்டிப் படுத்துக் கொள்ளுதல் கூடாது.

சுவாமிக்கும் நந்திக்கும் குறுக்கே போகக் கூடாது. சிவ நிர்மால்யங்களைத் தாண்டுதல், மிதித்தல் கூடாது.

கோபுரம், கொடிமரம், பலிபீடம், விக்கிரகம் ஆகியவற்றின் நிழலை மிதிக்கக் கூடாது.

கோவிலுக்குத் தேங்காய், வெற்றிலை, பாக்குக் கொண்டு செல்ல வேண்டும். பிறர் பொருளைக் கொண்டு இறைவனுக்கு நைவேத்தியம் செய்யக்கூடாது.

வீட்டில் தினமும் செய்யும் வழிபாட்டை செய்யாமல் நிறுத்தி விட்டு கோவிலுக்குச் செல்லக்கூடாது.

பிறர் வீட்டில் சாப்பிட்ட அன்று கோவிலுக்குச் செல்வது தவறு.

மரணத்தீட்டு உள்ளவர்களைத் தொட்டபின் குளிக்காமல் கோவிலுக்குச் செல்லக்கூடாது.

கறுப்பு வண்ண உடை அணிந்து கோவிலுக்குச் செல்லக்கூடாது.

அர்ச்சகரிடம் இருந்து வாங்கி திருநீறு பூசிக் கொள்ளும் போது "சிவசிவ" என்று உச்சரித்தபடி பூச வேண்டும். ஒரு கையால் திருநீறு, குங்குமம் வாங்குதல் கூடாது. விபூதி, குங்குமம் பெறும் முன்பே அர்ச்சகருக்குத் தட்சணை கொடுத்து விட வேண்டும்.

சண்டிகேசுவரர் சிவ சிந்தனையில் இருப்பவர். எனவே அவர் முன்னின்று கை தட்டுவது, சொடுக்குப் போடுவது கூடாது. அவர் மீது நூலினைப் போடுவதும் விபூதி, குங்குமத்தைப் போடுவதும் அபசாரம் ஆகும். இறைவனுக்குச் சாத்தப்பட்ட திருநீறு, வில்வம், மலர்களை மிதித்து விடக்கூடாது. ஆலயத்துக்குள் யார் காலிலும் விழுந்து வணங்கக் கூடாது.

ஆலய வழிபாட்டுக்குக் குடும்பத்தோடு சென்று வருவது நல்லது. பரிகாரத் தலத்துக்குச் சென்றால் வேறு யார் வீட்டுக்கும் செல்லாமல் வீடு திரும்ப வேண்டும். யாரிடமும் கடன் வாங்கி ஆலயத்துக்குச் செல்லாதீர்கள்.

எந்த ஒரு ஆலயத்துக்குச் செல்லும் முன்பும் குலதெய்வ வழிபாட்டை அவசியம் செய்ய வேண்டும். முக்கிய பூஜைகளை நல்ல நேரம், திதி, ஹோரை பார்த்துச் செய்வது நல்லது.

பொழுது போக்கை மனதில் வைத்துக் கொண்டு ஒருபோதும் ஆலயத்துக்குச் செல்லாதீர்கள். ஆலயங்களுக்குச் செல்வதற்கு முன் ஒரு நாளும் பின் ஒரு நாளும் இறந்தவர் வீட்டுக்குச் செல்லாதீர்கள்.

பிரகாரத்தை வலம் வரும்போது அந்தந்த இறை சந்நிதிக்கு ஏற்ப சுற்றி வழிபடுங்கள். திரை போட்ட பிறகு பிரதட்சணம் வேண்டாம்.

சுவாமி சந்நிதியில் ஸ்தோத்திரம் சொல்லும்போது மற்றவர்களின் அமைதி கெடாதபடி மனதுக்குள் உச்சரிக்க வேண்டும்.

நிறைய வேண்டுதல்களைச் சொல்லாதீர்கள். மற்றவர்களைக் கெடுக்கும் நோக்கத்துடன் இறைவனிடம் வேண்டாதீர்கள். முழுமையான மன அமைதியுடன் வழிபாடு செய்வது நல்லது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 24 மணி நேரத்தில் 11 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வீதி விபத்துகளினால் நேற்றுக் காலை ஆறுமணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்துக்குள் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் வீதி விபத்துகளை கட்டுப்படுத்துவதற்காக விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது.

வீதி விபத்துகள் காரணமாக நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்துக்குள் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் மாத்திரம் 8 பேர் உயிரிழந்துள்ளனர். நாட்டில் ஏப்ரல் மாதத்திலேயே அதிகளவான வாகன விபத்துக்கள் பதிவாகி வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## அதிவேக நெடுஞ்சாலையின் நான்கு நாள் வருமானம் 135 மில்லியனைக் கடந்தது

(கொழும்பு)

புத்தாண்டை முன்னிட்டு, கடந்த நான்கு நாட்களில், அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்த வாகனங்களின் மூலம் 135 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு பிரிவு பதில் பணிப்பாளர் நிஹால் லொட்றிக் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த 8 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அதிக வாகனங்கள் பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 260 | 180 | 200 |
| தக்காளி | 120 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 60 | 50 |
| கோவா | 120 | 100 | 160 |
| கரட் | 200 | 200 | 250 |
| பூசணி | 60 | 70 | 80 |
| புடோல் | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 280 | 280 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 160 |
| பயற்றங்காய் | 200 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 160 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 600 | 500 |
| போஞ்சி | 180 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 180 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 140 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 75 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 220 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 120 | 240 |
| முள்ளங்கி | 40 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோக நெல் விதைப்பினை விரைவாக நிறைவு செய்யவும்



## நீர்ப்பாசனத் திணைக்களம் வேண்டுகோள்

(அக்கராயன்)

**விவசாயிகள் சிறுபோக நெல் விதைப்பினை விரைவாக நிறைவு செய்ய வேண்டும் என வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தற்போது நிலவும் வெப்பம் காரணமாக நீர் ஆவியாதல் அதிகரித்து வருகின்றது. கூட்டங்களில் தீர்மானிக்கப்படுகின்றபடியே வேகமாக விதைப்புகளில் ஈடுபடுங்கள். சிறுபோகத்தில் பொது பங்குகள் இல்லை. விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கையில் கூடுதலாக ஈடுபட வேண்டும். வவுனிக்குளத்தினைப் பொறுத்த வரையில் தற்போது நீர் மட்டம் 22 அடியாக காணப்படுகின்றது.

சிறுபோக நெற்செய்கை நடைபெறுகின்ற குளங்களில் விவசாயிகள் விரைவாக விதைப்புகளை நிறைவு செய்து நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட சிறுபோக நெற்செய்கையுடன் உப உணவுப் பயிர்ச் செய்கைக்கும் கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

உப உணவுப் பயிர்ச் செய்கைக்கான விதை , தானியங்களை கிளிநொச்சி யிலும் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவித்தார். (5-4-350)

# புத்தாண்டு எமக்கு கரி நாளே

## வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள்

(அராலி)

புத்தாண்டு தினத்தை கரி நாளாக கொண்டாடுகின்றோம் என வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டு தினத்தைக்கூட நாங்கள் வீட்டில் உள்ள உறவுகளோடு கொண்டாட முடியாமல் எமது பிள்ளைகளோடு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். இந்த நாளை நாங்கள் கரி நாளாகத்தான் கொண்டாடுகின்றோம் என வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) 45 ஆவது நாளாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எங்களுக்கான பதில் வந்தும் கூட எங்களை வேலைக்கு அனுப்பவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது நிலையைக் கருத்தில் கொள்ளவில்லை.

மழை, பனி, வெயில் என அனைத்திலும் நாங்கள் அகப்பட்டு சிறுவர்களோடும் சேர்ந்து துயரங்களை அனுபவித்து வருகின்றோம் எனத் தெரிவித்தனர். (5-4-104)

# அனைவரையும் அச்சத்தில் வைத்திருப்பதே அரசின் நிலைப்பாடு- றிசாத்

(நெளுக்குளம்)

நாட்டில் என்ன நடக்கும் எப்போது நடக்கும் என்று எவருக்கும் தெரியாத அச்சமான சூழலை அரசு ஏற்படுத்தியிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார். வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர் பல்வேறு கிராமங்களிற்கு பயணம் செய்து மக்களைச் சந்தித்தார்.

இதன் பின்னர் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

தொடர்ச்சியான சதிகளை இந்த அரசு செய்து கொண்டேயிருக்கின்றது. குறிப்பாக கொவிட் தொற்று நோயினால் இறப்பவர்களின் சடலங்களை பலவந்தமாக எரிக்கும் சதியினை இந்த அரசாங்கம் செய்தது. எமது கருத்துக்களையும் மக்களின் வேதனைகளையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஜெனிவாவால் அந்த விடயம் இடை நிறுத்தப்பட்டது.

அதன்பிறகு சிறுபான்மை சமூகம் சார்ந்து பேசுபவர்களின் குரல்களை நசுக்கும். சதி நடந்து கொண்டிருக்கின்றது. கடந்த மாதம் அசாத் சாலியை கைது செய்தார்கள். அதேபோல அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கைகளை எதிர்த்து பேசுகின்ற அசல சம்பத் என்கின்ற சிவில் அமைப்பை சேர்ந்தவரை கைது செய்திருப்பதாக அறிகிறேன். இந்த நாட்டில் என்ன நடக்கும் எப்போது நடக்கும் யாருக்கு நடக்கும்? என்ன செய்வார்கள் என்பது தெரியாது. அனைவரும் ஒரு பயத்தோடு வாழ வேண்டும் என்று இந்த அரசு விரும்புகின்றது என தெரிவித்தார். (5-4-299)



# பாலம் அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிழக்கு வரணி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கயிலிகுளப் பிள்ளையார் கோவில் வீதியை ஊடறுத்துச் செல்லும் வாய்க்காலுக்கு பாலம் அமைத்துத் தருமாறு அக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், மாசேரி கிராமத்தையும் வரணி இடைக்குறிச்சி கிராமத்தையும் இணைக்கின்ற இந்த வீதியானது 1.5 கிலோமீற்றர் நீளமுடையது எனவும் ஐம்பது வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்பும் இன்றி மண் வீதியாகவே காணப்படுகிறது. இதனால் மழை காலத்தில் குளத்து நீரானது நிறைந்து இவ்வாய்க்கால் வழியாக வயல் நிலங்களுக்குச் செல்வதால் இந்த வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அது மட்டுமன்றி தினமும் நூற்றுக்கணக்கானோர் இவ் வீதியைப் பயன்படுத்தி வருவதாகவும் மாரி காலத்தில் மாற்று வீதியின் ஊடாகவே தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதாக மக்கள் குறிப்பிட்டனர்.

அப்பகுதி மக்கள் மாரிகாலங்களில் அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதால் இந்த வீதிக்கு பாலம் ஒன்றினை அமைத்துத்தருமாறு கடந்த காலங்களில் கோரிக்கை விடுத்த போதும் எவ்வித பயனும் ஏற்படவில்லையென் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இம்மக்களின் நிலைமையை கருத்திற்கொண்டு இந்த வருடத்திலாவது மழை காலம் தொடங்குவதற்கு முன்பாக இடைக் குறிச்சி கிழக்கு கயிலிகுளப் பிள்ளையார் வீதிக்கு பாலம் ஒன்றினை அமைத்துத் தருமாறு பிரதேச மக்களும் சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (5-4-103)



கிளிநொச்சி உருத்திரபுரம் மாணிக்கப் பிள்ளை யார் ஆலய தேர்த் திருவிழா நேற்று நடை பெற்றது.
(படம்:-ரகுபதி)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த்திரு விழா சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்றுப் புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.
(படம்:-ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.
> ~ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உருத்திரசேனை அமைப்பினருக்கு ஒரு பகிரங்க மடல்

உருத்திரசேனை என்ற அமைப்பின் செயற்பாடுகள் பகிரங்கமாக வெளியில் வரவில்லையாயினும் அவர்களின் செயலாக்கம் வரவேற்கப்பட வேண்டியது என்பதில் இரு வேறு கருத்திற்கிடமில்லை.

அண்மையில் உருத்திரசேனை இளைஞர்கள் சிலர் மதமாற்றம் செய்கின்றவர்களுடன் கதைத்த காணொளி சமூக வலைத்தளங்களில் வெளிவந்திருந்தது.

அவர்கள் கதைத்த அணுகுமுறை உண்மையில் பாராட்டப்பட வேண்டும். கடும் சொற்களைப் பிரயோகிக்காமல், தாம் சார்ந்த சைவ சமயத்தின் பக்கம் இருக்கக்கூடிய நியாயங்களை முன்வைத்தனர்.

கோபமின்றி, ஆத்திரமின்றி, பதட்டமின்றி மிக நிதானமாக அவர்கள் முன்வைத்த கருத்துக்களும் அவர்களின் அண்மைக் கால வேலைத்திட்டங்களும் பலரையும் வெகுவாக ஈர்த்துள்ளன.

மதமாற்றம் செய்ய வந்தவர்களிடம் உருத்திரசேனை இளைஞர் ஒருவர்; உங்கள் வீடு தேடி வந்து எங்கள் சைவ சமயத்தைப் பற்றிப் போதனை செய்தால் அதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

எதற்காக மதம் மாற வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அவரவர் அவரவர் சமயத்தில் இருந்து விட்டுப் போகட்டும்

மதமாற்றத்தின் மூலம் எங்கள் தமிழினத்துக்கு நீங்கள் ஈனம் செய்கிறீர்கள் என்று எடுத்துரைத்தபோது, மதமாற்றம் செய்ய வந்தவர்களால் மறுத்துரைக்க முடியவில்லை.

இவை ஒருபுறமிருக்க, அண்மையில் மதமாற்ற சபை ஒன்று குறைந்தது ஒரு இலட்சம் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு யாழ்ப்பாணம் முழுவதிலும் அவற்றை ஒட்டியிருந்தது.

இதைப் பார்த்தபோது இத்தகையவர்களின் உள்நோக்கம் தமிழ் இனத்தின் ஒற்றுமையை வேரறுப்பது போல இருந்தது.

ஆக, இவ்விடத்தில்தான் உருத்திரசேனை இளைஞர்களுக்கு இப்பகிரங்க மடலை எழுத வேண்டும் என்று எண்ணத் தோன்றியது.

ஆம், காலம் உணர்ந்து கடமையாற்றும் உருத்திரசேனை இளைஞர்களே!

மதமாற்றத்தைத் தடுக்கின்ற உங்கள் முயற்சி உயர்வானது. நியாயமானது. காலத்தின் தேவையானது.

அதேவேளை புதிய புதிய சபைகளால் மதமாற்றம் செய்யப்பட்ட சைவ மக்களை மீண்டும் தாய்ச் சமயத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்ற பணியை நீங்கள் செய்தாக வேண்டும்.

தாய்ச் சமயத்தினின்றும் விலகுவது, பெற்ற தாய்க்கும் பெற்ற தந்தைக்கும் பிறந்த மண்ணுக்கும் முன்னோர்களுக்கும் செய்கின்ற மிகப் பெரும் நீசமாகும் – பாவச் செயலாகும்.

ஆகையால் மீளவும் உங்கள் தாய்ச் சமயமாகிய சைவ சமயத்துக்குத் திரும்புங்கள் என்ற கோரிக்கையை பகிரங்கப்படுத்துங்கள்.

துண்டுப் பிரசுரங்கள் மூலம் கோரிக்கை விடுங்கள். உருத்திரசேனை இளைஞர்களைக் களமிறக்கி; **தாய்ச் சமயத்துக்கு அழைத்து வருதல்** என்ற திட்டத்தை அரங்கேற்றுங்கள்.

பிறந்திருக்கின்ற பிலவ புத்தாண்டு **உங்களின் முயற்சியைத் திருவினையாக்கும்.** இது சத்தியம்.

## அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான விசாரணை

# பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான யோசனை பாராளுமன்றில் 21 ஆம் திகதி முன்வைப்பு

(கொழும்பு)

2015 ஜனவரி 8 ஆம் திகதி முதல் 2019 நவம்பர் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழி வாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்சவால் எதிர்வரும் 21 ஆம் திகதி மேற்படி யோசனை சபையில் முன் வைக்கப்படும் எனத் தெரிய வருகின்றது. அத்துடன் இந்த விவகாரம் தொடர்பில் ஏப்ரல் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்படலாம் எனவும் அறிய முடிகின்றது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையானதுஅரசியல் உள்நோக்கம் கொண்டது எனவும், எதிரணி உறுப்பினர்கள் 10 பேரின் குடியுரிமையைப் பறிப்பதற்கான யோசனை கூட அதில் உள்ளது எனவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

குறித்த ஆணைக்குழு நீதிமன்ற அதிகாரத்தைக்கூட சவாலுக்குட்படுத்தியுள்ளதால் பரிந்துரைகள் அமுலாவதைத் தடுப்பதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளையும்எதிரணி மேற்கொண்டுள்ளது.(ம-3)

## வல்லைப் பாலத்தடியில்

# கன்ரர் ரக வாகனம் குடைசாய்ந்து விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லை பாலத்தடியில் குளிர்களிகனரகவாகனம் குடைசாய்ந்தது.

நேற்று நண்பகல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழைபெய்ததன் காரணமாகவல்லை பாலத்தில் காணப்பட்ட வழுக்கல்நிலை காரணமாகவே கட்டுப்பாட்டை இழந்த வாகனம் குடைசாய்ந்தது.

எனினும் வாகனத்தில் மூவர் பயணித்திருந்த நிலையில் உயிராபத்து ஏற்பட வில்லை என தெரிவிக்கப்படுகின்றது

குறிப்பாக அண்மைய நாட்களில் வல்லை பாலத்தில் மழை நேரத்தின் போது வழுக்கல் காண்படுவதன் காரணமாக பல விபத்துக்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-03,33)

## சீனாவுக்கான இலங்கை தூதுவர்

# பாலித்த தனது பதவிக்கான சான்றுகளை கையளித்தார்

(பீஜிங்)

சீனாவுக்கான இலங்கையின்தூதுவர் பாலித்த கொஹன சீன அதிபர் ஜி ஜின்பிங்கிற்கு தனது பதவிக்கான சான்றுகளைக் கையளித்தார்.

ஜனாதிபதி ஜி ஜின்பிங் 29 நாடுகளின் சீனாவுக்கான புதிய தூதுவர்களின் பதவிச் சான்றிதழ்களை இன்று (புதன்கிழமை) பெய்ஜிங்கில் உள்ள மக்கள் அரங்கில் வைத்துப் பெற்றுக்கொண்டார்.


ஆப்கானிஸ்தான், கிரீஸ், பொஸ்னியா, மடகாஸ்கர், இத்தாலி, திமோர், சூடான், மொரீஷியஸ், நேபாளம், பாகிஸ்தான், மால்டோவா, டென்மார்க், பெல்ஜியம், ஓமான், தஜிகிஸ்தான், ஐக்கிய இராச்சியம், வெனிசுலா, ஜப்பான் தென்னாப்பிரிக்கா, இலங்கை, பெலாரஸ், அயர்லாந்து, இஸ்ரேல்,கொரியா ஜனநாயக மக்கள் குடியரசு, ஈராக் மற்றும் அர்ஜென்டினா ஆகிய நாடுகளின் சீனாவுக்கான தூதுவர்களே இன்று தமது சான்றிதழ்களைக் கையளித்தனர். இதன் போது உரையாற்றிய சீன ஜனாதிபதி, இந்த ஆண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட 100 வது ஆண்டு நிறைவு பெறுவதாகக் குறிப்பிட்டார். இது சீனாவின் 14 வது ஐந்தாண்டு திட்டத்தின் (2021-2025) முதல் ஆண்டாகும்.

இது சோசலிச நவீனமயமாக்கலுக்கான புதிய பயணத்தைக் குறிக்கிறது.

சீனா ஒரு புதிய அபிவிருத்தி தத்துவத்தைப் பின்பற்றி ஒரு புதிய அபிவிருத்தி முன்னுதாரணத்தை வளர்க்கும்.

சீனாவின் வளர்ச்சி அவர்களின் நாடுகளில் உள்ள மக்களுக்குச் சிறந்த பயன் தரும் என்றும் சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-03)

# சத்திய தரிசனம்



## இணைபிரியாத நண்பர்கள்

- நம் வாழ்வை திட்டமிட்டு நாமே அமைத்து கொள்ள வேண்டும். பிறர் அபிப்பிராயத்திற்காக வாழ்வது கூடாது.
- மனித இதயத்தில் ஆசை, கோபம் போன்ற பெருந்தீ எரிந்து கொண்டு இருக்கிறது. இதனை நெறிப்படுத்தாவிட்டால் மனித சமூகமே அழிந்து விடும்.
- சிறுகல்லைக் கூட கடவுள் நிலைக்கு உயர்த்த முடியும். ஆனால், கடவுளைக் கல்லாக கீழே கொண்டு வருவது கூடாது.
- நமக்குத் தேவையானதை வழங்க கடவுள் எப்போதும் தயாராக இருக்கிறார். ஆனால், அதை பெறுவதற்கு நம்மை இன்னும் தகுதிப்படுத்திக் கொள்ளவில்லை.
- இளமையிலேயே நா ருசியைக் கட்டுப்படுத்துவது நல்லது. இதனால், நோய்கள் அண்டாமல் ஆரோக்கியமாக வாழமுடியும்.
- துன்பத்திலும் இன்பத்தைக் காண்பவனே சிறந்தவன். அத்தகையவனைக் கடவுளுக்கு நிகராக ஒப்பிடலாம்.
- அமைதியும், ஆனந்தமும் இணைபிரியாத நண்பர்கள். தியானத்தின் மூலம் இவர்களின் நட்பைப் பெற முடியும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை

## நினைத்தது நிறைவேறி நிம்மதி கிடைக்கும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**தனுசு இராசி வாசகர்களே!**

பிறக்கும் புத்தாண்டில் உங்கள் இராசிநாதன் குருபகவான், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனியில் பாதச்சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. எனவே குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறலாம். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். தன ஸ்தானத்தில் சனி பலம் பெற்றிருப்பதால் பொருளாதார நிலை உயரும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான், வெற்றிகள் ஸ்தானத்தில் இருக்கின்றார். தனாதிபதி சனி, சொந்த வீட்டில் பலம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனை யோகத்தோடும், புத -ஆதித்ய யோகத்தோடும், புத -சுக்கிர யோகத்தோடும் இந்த ஆண்டு பிறக்கின்றது. எனவே நினைத்த காரியங்கள் நினைத்தபடி நிறைவேறும். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் காண்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். வழக்குகள் சாதகமாக முடியும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். சொத்துக்களாலும் சொந்தங்களாலும் வந்த பிரச்சினை அகலும்.

ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடப்பதால், குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றை குறிக்குமிடமான 2 ஆம் இடத்தில், சனி பகவான் ஆட்சி பெற்றிருப்பதால் வாக்கு வலிமை அதிகரிக்கும். மக்கள் மத்தியில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும். சிக்கல்களில் இருந்து படிப்படியாக விடுபடுவீர்கள். செல்வ நிலை உயரும் விதத்தில், தொழில் வளம் சிறப்பாக அமையும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ அல்லது வேலைவாய்ப்பு சம்பந்தமாகவோ ஏதேனும் முயற்சி செய்திருந்தால், அதில் வெற்றி கிடைக்கும்.

மூன்றாடமிடத்தில் குருபகவான் இருப்பதால் முயற்சிகள் அனைத்தும் சாதகமாக அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தற்கால பணியாக நியமிக்கப்பட்டிருந்தால், அது நிரந்தரப் பணியாக மாறும். விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். சுக ஸ்தானத்திற்கு குரு அதிபதி என்பதால், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். பிள்ளைகள் பட்டப்படிப்பு சம்பந்தமாகவும் படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு சம்பந்தமாகவும் முயற்சி எடுத்திருந்தால் அதிலும் அனுகூலங்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட் சலுகைகளும் கிடைக்கலாம்.

பஞ்சம ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. அவை யோகம் தரும் விதத்திலேயே அமைகின்றது. புத -சுக்கிர யோகம் இருப்பதால், இடம், வீடு வாங்கும் அமைப்பு உண்டு. வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். தேங்கிய காரியம் சுறுசுறுப்பாக நடைபெறும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். ராகு-கேது ஆதிக்கத்தின் விளைவாக புதிய வாகன யோகம் உண்டு. பயணங்களால் பலன் உண்டு. பொதுவாழ்வில் புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். அதோடு 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். 14.9.2021 முதல் 12.10.2021 வரை, மகர இராசியில் குருபகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதனாகவும் நான்காமிடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குருபகவான். அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். பண நெருக்கடி ஏற்படலாம். உடன்பிறப்புகளால் மன அமைதி குறையும். தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. உறவினர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னிட்டு ஒரு தொகையை கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகும்.

**குருப்பெயர்ச்சி காலம்**


ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குருபகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன்பிறகு13.4.2022 அன்று மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களில் பதிகின்றது.

குரு பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால், கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். 'பிள்ளைகளுக்கு வரன்கள் வந்து விலகிப்போகிறதே, எப்பொழுது தான் முடியும்' என்று அங்கலாய்த்த பெற்றோர்களுக்கு, இப்பொழுது நல்ல பதில் கிடைக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து பணிபுரிய எதிர்பார்த்த வாய்ப்புகள் கைகூடி வரும்.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பொன், பொருட்களின் சேர்க்கை உண்டு. பழைய நகைகளைக் கொடுத்துவிட்டுப் புதிய நகைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு கிடைக்கும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரம் இது. 'வைத்திருக்கும் வாகனம் தொல்லை தருகிறதே, எப்பொழுது அதை மாற்றலாம்' என்ற எண்ணத்தில் இருப்பவர்களுக்கு, இப்பொழுது அதற்கான வாய்ப்பு உருவாகும். நீண்ட கால நோய்கள் குணமாகும். தொழிலில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகல, சட்டத்துறை வல்லுநர்கள் உங்களுக்கு சரியான பாதையை அமைத்துக் கொடுப்பர்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களை குருபகவான் பார்ப்பதால், விலகிய சொந்தங்கள் விரும்பி வந்து இணையும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். அனுபவஸ்தர்களின் ஆலோசனையும் கைகொடுக்கும். பொதுவாக பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் நேரம் இது.

**ராகு-கேது பெயர்ச்சி காலம்**




21.3.2022 அன்று மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 5 ஆம் இடத்திற்கு ராகுவும் 11 ஆம் இடத்திற்கு கேதுவும் வருகிறார்கள். இக்காலத்தில் நல்ல மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரும். முன்னோர் செய்த ஆலயத் திருப்பணிகளைத் தொடரும் வாய்ப்பு கிடைக்கும். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். பாகப்பிரிவினையில் இதுவரை தடை செய்த உறவினர்கள் இப்பொழுது விலகுவர். நினைத்தது நிறைவேறும். பிள்ளைகள் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினை படிப்படியாக அகலும்.

**சனியின் வக்கிர காலம்**

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனிபகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 2,3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான். அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. யோகம் தரும் சனிபகவான் வக்கிரம் பெறுவதால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் வரும். கடுமையாக முயற்சித்தும் காரியங்கள் முடிவடையாமல் போகலாம். சோம்பலும் சோர்வும் மனக்குழப்பமும் அதிகரிக்கும்.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

14.4.2021 முதல் 3.6.2021 வரை, 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை, செவ்வாய்- சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் எதையும் துணிந்து செய்ய இயலாது. தன்னம்பிக்கை குறையும். பிள்ளைகளால் பிரச்சினைகள் அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோர் எண்ணிக்கை கூடும். வீடு மாற்றங்களும் உத்தியோக மாற்றங்களும் விரும்பத் தகாத விதத்தில் அமையும். வெளிநாடு சென்றவர்கள், அங்கு சென்றதற்கான பலன் கிடைக்காமல் பாதியிலேயே சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை உண்டு. குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கிய தொல்லை வரலாம். மதிப்பையும் மரியாதையையும் தக்க வைத்துக் கொள்வது அரிது. பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டு உங்களுக்குப் பொருளாதார விருத்தியை அதிகரிக்கும் ஆண்டாக அமையப்போகின்றது. ஜென்மச் சனி விலகி விட்டதால், இனிமேல் ஆரோக்கியம் சீராகும். கணவன் - மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவு தக்க சமயத்தில் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்ள மாட்டார்கள்.

தள்ளிப்போய்க் கொண்டிருந்த சுப நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான சூழல் அமையும். பணிபுரியும் பெண்களுக்கு நினைத்த இலக்கை அடைய சந்தர்ப்பங்கள் சாதகமாக வந்து சேரும். குரு வழிபாடு குதூகலம் தரும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

வியாழக்கிழமை தோறும் குருபகவானை வழிபடுவதோடு, யோகமான நாளும், நட்சத்திரமும் திதியும் கூடும் தினத்தில் அம்மன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வளர்ச்சியில் உள்ள தளர்ச்சி அகலும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 165 பேர்...

தலைமை நர்சிங் பயிற்றுவிப்பாளர் புஷ்பாரம்யானிடி சொய்சா தெரிவித்தார்.

சண்டைகள் காரணமாக 21 பேரும் உடல் ரீதியான தாக்குதல் தொடர்பாக 19 பேரும் காயமடைந்துள்ளனர். ஏனையோர் வீதி விபத்துக்கள் மற்றும் பட்டாசு வெடித்தல் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் காரணமாகக் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு புத்தாண்டில் 85 நபர்கள் மட்டுமே காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

புத்தாண்டு பருவத்தில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பண்டிகைக் காலங்களில் அதிகமாக மது அருந்துவதைத் தவிர்க்கவும், விபத்துக்குள்ளாகும் சம்பவங்களைக் குறைக்கவும் அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். (ம-3)

## 38 அரச...

தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பின்னர், இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான பொதுச் செயலாளர் காரியாலயத்தின் பணிப்பாளர் நாயகம், சட்டத்தரணி ராஜா குணரத்ன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ், அடிப்படைவாதத்துடன் தொடர்புடைய 11 இஸ்லாமிய அமைப்புக்கள் நாட்டினுள் தடை செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ள அமைப்புக்களில், 3 அரச சார்பற்ற நிறுவனங்களும் அடங்குவதாக அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான பொதுச் செயலாளர் காரியாலயத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 8 வயது சிறுவன்...

மற்றைய சிறுவன் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்றுக் காலை 8.45 மணியளவில் நாவலர் வீதி கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயரூபன் மதுசிகன் (வயது-8) என்ற சிறுவன் உயிரிழந்தார்.

அவரது மூத்த சகோதரனான 12 வயதுச் சிறுவன் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சகோதரர்கள் இருவரும் துவிச்சக்கர வண்டியில் பயணித்தபோது எதிரே வந்த பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

மூத்த சகோதரன் துவிச்சக்கரவண்டியைச் செலுத்திச் சென்றுள்ளார். பின்னிருக்கையிலிருந்த இளைய சகோதரன் வீதியின் பக்கம் வீழ்ந்ததால் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

பட்டா ரக வாகனத்தின் சாரதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நளினி சுதாகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

சாரதியை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மேலதிக நீதவான் உத்தரவிட்டார். (ம-3,33)

## சிறுவன் இயக்...

பட்டிருந்த மோட்டார் சைக்கிளை சிறுவன் விளையாட்டாக இயக்கியபோது மோட்டார் சைக்கிளின் முன்பாக விளையாடிக் கொண்டிருந்த, சகோதரியின் வயிற்று பகுதியின் மேலாக மோட்டார் சைக்கிள் ஏறியது.

இதில் பரிதாபகரமாக அகப்பட்டு ஒன்றரை வயதான சகோதரி உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மட்டுவில் - சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த கஜேந்திரன் தஸ்மிகா என்ற பச்சிளம் பாலகியே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-3,18,26,30,33)

## தமிழ் இளைஞன்...

டுபாய் ஊடாக கனடாவுக்குச் செல்ல முற்பட்ட மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதான இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 3.15 மணிக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் நோக்கி பயணிக்கவிருந்த எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் பயணிப்பதற்காக இவர் விமான நிலையத்திற்கு சென்றிருந்தார்.

அதன்பின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினர் மேற்கொண்ட தொழினுட்ப ரீதியான பரிசோதனையின்போது கனடாவுக்கான கடவுச்சீட்டு போலியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## யாழில் மேலும்...

வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 145 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவர்களில் திருநெல்வேலி சந்தை வர்த்தகர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 21 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## ஹிட்லர் தொடர்...

பாராளுமன்ற உறுப்பினரின் தனிப்பட்ட கருத்து என்று கூறினார். இந்த கருத்து அரசாங்கத்தின் கூட்டு நிலைப்பாடு அல்ல என்றும் அரசாங்கத்தின் முன்னோக்கு என்று கருதக்கூடாது என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களின் தனிப்பட்ட கருத்துக்களை தீவிரமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் அவை தனிப்பட்ட கருத்துக்கள் என்றும் அவர் தெரிவித்தார். இந்தக் கருத்து இலங்கையில் உள்ள ஜேர்மன் தூதுவருடன் முரண்பாட்டை ஏற்படுத்தாது என்று தான் நம்புவதாகவும் அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

ஹிட்லரைப் போல செயற்பட ஜனாதிபதிக்கு 6.9 மில்லியன் மக்கள் வாக்களித்ததாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அண்மையில் நடந்த ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். அரசாங்கம் விமர்சிக்கப்படுவதற்கான காரணம் ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரியைப்போல செயற்படாததே என்று அவர் மேலும் கூறினார்.

அவரது அறிக்கைக்கு பதிலளித்த இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஹோல்கர் சியூபர்ட், எந்தவொரு அரசியல்வாதிக்கும் ஹிட்லர் முன்மாதிரியாக இல்லை என்று சுட்டிக் காட்டினார். 'ஒரு ஹிட்லர்' இலங்கைக்கு நன்மை பயக்கும் என்ற கூற்றுக்களை நான் கேட்கிறேன்.

மில்லியன் கணக்கான இறப்புகளுடன், கற்பனைக்கு அப்பாற்பட்ட மனித துன்பங்களுக்கும் விரக்திக்கும் ஹிட்லர் தான் காரணம் என்று அந்தக் குரல்களை நினைவூட்டுகிறேன். நிச்சயமாக எந்த அரசியல்வாதிக்கும் முன்மாதிரியாக அவர் இல்லை," என்று அவர் டுவீட் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இலங்கையில்...

ளது.

நேற்று புதன்கிழமை 99 புதிய தொற்றாளர்கள் இனங் காணப்பட்டனர்.

அதற்கமைய மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 95, 719 ஆக உயர்வடைந்துள்ளது.

இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 92,151 பேர் குணமடைந்துள்ளதோடு, 2,966 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் மரணங்களின் எண்ணிக்கை 602 ஆக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் இரு கொரோனா மரணங்கள் பதிவாகின. (ம-3)

## ஆளுமையுள்ள...

னேஸ்வரன் கூறியிருப்பது அவரது சொந்தக் கருத்து.

எனினும், வடக்கு - கிழக்கில் நிர்வாக ஆளுமையும் நடைமுறை அரசியலை கையாள தெரிந்த ஒருவருமே முதலமைச்சர் வேட்பாளராக வேண்டுமென தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக தமிழ் தேசிய கட்சியின் தலைவர், மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் பொது முதலமைச்சர் வேட்பாளராக வேலன் சுவாமிகளை களமிறக்கலாமென, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் என்.சிறிகாந்தாவை தொடர்பு கொண்டு வினவியபோதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் வாழ்வும், வாழ்விடமும் தொடர்ந்தும் பாரிய சவால்களிற்கும், நெருக்கடிகளிற்கும், அச்சுறுத்தல்களிற்கும் உள்ளாகிக் கொண்டிருக்கும் சூழலில், தமிழ் தேசிய சக்திகள் அனைத்தும் ஒரு பொதுவான அரசியல் செயற்றிட்டத்தின் அடிப்படையில் ஓரணி திரண்டு, ஒற்றுமையுடன் செயற்படுவதே இன்றைய அவசர, அவசிய தேவையாக உள்ளது.

இந்த நிலையில் மாகாண சபை தேர்தலை பற்றி திட்டவட்டமாக இப்பொழுது எதையும் தமிழர் தரப்பிலிருந்து கூற முடியாதுள்ளது. முதலில் தேர்தல்கள் நடத்துவது தொடர்பில் அரசு ஒரு முடிவிற்கு வர வேண்டும் என்றார். (ம-3)

## வட மாகாணத்தில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

வடக்கில் 5 மாவட்டங்கள் அடங்கலாக 18 மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதற்கமைய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், புத்தளம், குருநாகல், மாத்தளை, கம்பஹா, கேகாலை, கண்டி, கொழும்பு, நுவரெலியா, பதுளை, களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு இடியுடன் கூடிய மழை ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

யில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக செட்டிகுளம், ஓமந்தை, சிவபுரம் மற்றும் அவிசதப்பிட்டி ஆகிய பகுதிகளில் குறித்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது.

அவற்றில் மோதல் சம்பவங்களே அதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அநேகமானவை மதுபோதையால் ஏற்பட்டிருந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## முல்லையில்...

குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் நேற்றிரவு 10.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இன்னொருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வள்ளிபுனம் பகுதியில் பாலம் ஒன்று புனரமைப்பு பணி நடைபெற்று வருகிறது.

குறித்த பாலத்திற்கு பதிலாக தற்காலிக பாலம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் ஊடாகவே போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இரவு பத்து மணியளவில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் நிரந்தர பாலம் அமைக்கப்பட்டுவருகின்ற பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த மற்றொருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் விபத்துக்கு உள்ளானவர்களின் விபரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து மகாலிங்கம்



**பிறப்பு - 09.11.1946**
**இறப்பு - 14.04.2021**

நாகபூசணி அம்மன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மகாலிங்கம் நேற்று (14.04.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். திலகவதியின் அன்புக் கணவரும் துரைவீரசிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், இராசலிங்கம், திருவிளங்கம், கணேசலிங்கம், சியாமிளாதேவி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குலேஸ்வரி, குலேஸ்வரன் (இத்தாலி), குணேஸ்வரி (கனடா), குலேந்திரன் (இத்தாலி), தனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் அருணோதயன் (இத்தாலி), யாழினி (இத்தாலி), காலஞ்சென்ற தனராசகுமார், நிரஞ்சனா, திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரஜீவா, ரஜீவன், விமுசன், ஜனார்த்தன், விதுர்ஷன் (இத்தாலி), தரணிகா (இத்தாலி), மயூரி (கனடா), மதுஷா (கனடா), சஜிதா, தமிழ்குமரன், தமிழ்க்குன்றன், தமிழ்நேசன், கபினஜா ஆகியோரின் அன்புப் பேரனும் லர்மிகன், தர்ஸ்மிகா, அபிநயன், ஆதனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.04.2021) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(6574)

நாகபூசணி அம்மன் வீதி.
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.
077 283 7934

தகவல்:-
குடும்பத்தினர்

காணி விற்பனைக்கு
தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
( தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம் )
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
( தரகர் தேவையில்லை ) பரப்பு 5 இலட்சம்.
077 814 7389
077 614 7333

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வாடகைக்கு
யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பல்கலைக்கு அண்மையாக பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட கட்டடத்தில் இணைந்த குளியலறையுடனான தனி வழிப்பாதை கொண்ட TV, அலுமாரி, தளபாடமிடப்பட்ட அறைகள் மேற்படி வசதியுடையதுடன் சமையல் வசதி கொண்ட அறைகள், 1 அறை, 2 அறை கொண்ட Flat.
(6575)
077 105 6694

வேலையாட்கள் தேவையா?
உங்கள் நிறுவன Vacancy ( Office Works, Driver, Data Entry Operator ) களை நிரப்ப
dewmasweb.com
(6576)
074 138 3368

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-1895)
எமது கிளைகள்
கிளிநொச்சி சுன்னாகம் சாவகச்சேரி மானிப்பாய் நெல்லியடி பருத்தித்துறை திருகோணமலை வல்வெட்டித்துறை கோப்பாய் புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-1927)
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000/= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-1925)
0768226240 DHL

# மரண அறிவித்தல்



திருமதி

## செல்வநாயகி திருநாவுக்கரசு (தேவி)

**(பலகாடு, காரைநகர்)**

காரைநகர், புதுறோட், குமிழங்குழியை பிறப்பிடமாகவும் பலகாட்டை வசிப்பிடமாகவும் இல. 229, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகி - திருநாவுக்கரசு நேற்று முன்தினம் (13.04.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் (தலைமை ஆசிரியர்)- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசம்பு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செந்தில்நாயகி, செந்தில்நாதன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவகுமார், சிவசோதி (லண்டன்), காலஞ்சென்ற சிவபாலன், சிவராஜா (லண்டன்), சிவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவமணி, சுசிலா (லண்டன்), நந்தினி (லண்டன்), துவாரகேஸ்வரன் (ஈஸ்வரன் நிறுவன குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் - கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் சாரங்கன் (பொறியியல் பீட மாணவன் - பேராதனை பல்கலைக்கழகம்), கஜலக்சன் (யாழ். இந்துக்கல்லூரி மாணவன்), துளசி (லண்டன்), துசன் (லண்டன்); கஜிவன் (லண்டன்), அநோயன் (லண்டன்), அபிசன் (லண்டன்), சஜீவன், சரண் (மாணவர்கள் - கொழும்பு சர்வதேச பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.04.2021) வியாழக்கிழமை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவராசா (மகன் - லண்டன்) - 00447957263011
சிவசோதி (மகன் - லண்டன்) - 00447908192250
துவாரகேஸ்வரன் (மருமகன்) - 0094777674119 / 021 222 3590

(C-1974)

" சண்முகவாசம் "
இல. 229, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சிவசம்பு - திருநாவுக்கரசு
(கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.